

# ஜெயராமதீபம்


அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின்

## நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை அரசடி விநாயகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தாயே துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அ.ஜெயராமன் அவர்களின் தந்தையார்

**அமரர் வேலுப்பிள்ளை அம்பலவாணர்**

(மிருதங்க வித்துவான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அ.ஜெயராமன் அவர்களின் குரு

## அமரர் பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வர சர்மா

(வயலின் வித்துவான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப்
பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# அம்பலவாணர் ஜெயராமன்

அவர்களின்

## வாழ்வியலைச் சுமந்து வரும்

# ஜெயராம தீபம்

**12.05.2024**

**திதிவெண்பா**


சுபசோப கிருது பங்குனி தேய் சதுர்த்தசியில்
உபகார ஜெயராமன் சிவமாக - தவமாக
சங்கீத சாம்ராஜ்ஜிய வேந்தனாய் அரசாள
சிங்கார வான் புகுந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11321 (P)
PL


# சமர்ப்பணம்

அன்பாய் அகல்விளக்காய்
விளக்கின் ஜோதியாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய்
தென்றலாய், தண் நிலாவாய்
கலங்கரை விளக்காய்
புகழின் உச்ச உறைவிடமாய்
வாழ்ந்தீர்கள்
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
வழிகாட்டியாய் விளங்கி
எமக்கு நற்பாதையைக் காட்டிய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
நீங்கா நினைவுகள்
மனதில் சுமந்து கொண்டு
எமது கண்ணீர்ப்பூக்களை
பாதமலர்களுக்கு
காணிக்கையாக்குகின்றோம்.



- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியே
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

## திருவாசகம்

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டு விளக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட டென்னையுந்தன்
சுண்ண வெண்ணீறணிவத்து தூய்நெறியே சேரும் வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார் பெறுவார் அச்சாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணிபவளக்குன்றமே நின்ற
நெற்றிக்கண்ணுடையதோர் நெருப்பே
வேறணிபுவன போகமேயோக
வெள்ளமே மேருவில்வீரா
ஆறணிசடையெம்மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணிகொடியேம் மீசனேயுன்னைத்
தொண்டனே னிசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்கதர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடைமடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழிருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்தும வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத் தொடு ரட்சித் தருளுவது ஒருநாளே
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்துப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1974 ஆம் ஆண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
நடாத்திய போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்ட
அமரர் அ. ஜெயராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

## பிறப்பும் இளமைப்பருவமும்

ஈழநாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாண தலைநகரில் இருந்து 02 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் வண்ணார்பண்ணையின் ஒரு பகுதியில் நாச்சிமார் கோவில் விளங்குகின்றது. இக் கோவிலைச் சூழவுள்ள பகுதியில் பெரும் பாலும் விஸ்வப் பிரம்ம குலத்தவர் என சிறப்பிக்கப்படுகின்ற பொற்றொழிலாளர் குலத்தில் **1959.08.29** அன்று மிருதங்க வித்துவான் அம்பலவாணருக்கும் காமாட்சியம்மா என்பவருக்கும் மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். ஜெயராமன் அவர்களுக்கு வயலின் இசையிலும் இசைத்துறையிலும் நாட்டமும் ஆர்வமும் ஏற்பட இவரது தந்தையார் அம்பலவாணர் வழிகாட்டினார். புகழ் பூத்த மிருதங்க வித்துவானாக இவரது தந்தையார் விளங்கியதால் தன் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கலைத்துறையில் விட வேண்டிய பிரயாசை இருந்ததன் காரணமாக அனைவரையும் ஒவ்வொரு துறையில் மிளிரச் செய்தார். அத்துடன் அனைவருமே மிருதங்கம் வாசிக்கத் தெரிந்தவர்கள்.

ஜெயராமன் அவர்களது மூத்த சகோதரன் இரகுநாதன் அவர்கள் மிருதங்கத்துறையில் சிறந்து விளங்குவதோடு கொழும் பில் வசித்து வருகின்றார். மூத்த சகோதரியான சந்தானலக்சுமியும் மிருதங்கத்துறையில் ஈடுபாடு கொண்டதோடு அவரும் கொழும் பில் வசித்து வருகிறார். இளைய சகோதரனான ஸ்ரீநிவாசன் தற்பொழுது லண்டனில் வசிக்கின்றார். இவர் அங்கு நடைபெறும் கலை நிகழ்வுகளுக்கு முகர்சிங், மற்றும் கெஞ்சிரா போன்ற வாத்தியங்களை வாசித்துப் புகழ்பெற்று வருகின்றார். இளைய சகோதரி சரஸ்வதியும் சகோதரர் இராமச்சந்திரனும் வாய்ப்பாட்டு இசை யில் தேர்ச்சி பெற்றதோடு காமாட்சி அம்பாளுக்கு பணி செய்து நாச்சிமார் கோவிலடியில் வசித்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயராமனின் தந்தை லய ஞானம் கொண்ட பிரபல மிருதங்க வித்துவான் என்பதால் இவருக்கு இயற்கையிலேயே இசை ஞானம் உண்டாயிற்று. சிறு வயதில் இருந்தே தந்தையின் இசை நாதம் இவரை ஈர்த்ததன் காரணமாக ஏதாவது ஒரு இசைக்கருவி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு இவர் வயலின் இசைக்கருவியை தேர்ந்தெடுத்தார்.

அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யாழ்/கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்று இடைநிலைக் கல்வியை இன்றைய யாழ்ப் பாணப் பல்கலைக்கழகமாகத் திகழும் அன்றைய யாழ்ப்பாண பரமேஸ்வராக் கல்லூரியிலும், உயர்தரத்தில் கணிதப் பிரிவினை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வரை கல்வி கற்றார். குடும்பச் சூழல் காரணமாக உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பு கிட்டவில்லை.

கல்விப் பொதுத்தராதர உயர் தரத்துடனே 1983ம் ஆண்டு யாழ் மாநகர சபையின் பொதுசன நூலகத்திலும், உப நூலகங்களிலும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றி வந்தார்.

இவர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரசர்மா அவர்களை முதற்குரு வாக கொண்டு வயலினை அவரது 09ஆவது வயதில் கற்கத் தொடங்கி தனது 12 அவது வயதில் தனிக்கச்சேரி நடாத்தி எங்களூர் மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். இவரது குருவாகிய பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரசர்மாவிடம் இருந்து வயலின் வாசிக்கும் நுட்பங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். உயர்கல்விக்காக இவர் எங்கும் செல்லவில்லை. தனது சொந்த முயற்சியால் தன்னை நெறிப்படுத்தி, கேட்கும் பயிற்சிகளின் மூலம் ஒரு சிறந்த வயலின் வித்தகராக விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமண மற்றும் குடும்ப வாழ்க்கை**

ஜெயராமன் அவர்கள் தனது 25 வயதில் கொக்குவில் பூநாறிமரத் தடியை சேர்ந்த செல்வரத்தினம் புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வி கமலேஸ்வரியோடு திருமண பந்தத்தில் இவரது குலதெய்வ மான காமாட்சியம்பாள் கோவிலிலேயே இணைந்தார்.

ஜெயராமன் தம்பதிகளுக்கு சாரங்கன், சைந்தவி, சாருகேசி ஆகிய 3 குழந்தைகள் கிடைத்தனர். மூத்தமகன் சாரங்கன் 1984இல் பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்று மிருதங்கம், கீபோட் வாசிப்பதில் ஈடுபாடு கொண்டவர். தற்பொழுது இவர் இலங்கை உருக்குக் கூட்டுத் தாபனத்தின் யாழ் பிராந்திய விற்பனைப் பிரதிநிதி பொறுப்பாள ராக கடமையாற்றி வருகின்றார். இவரது பதிவுத் திருமணத்தை 20.01.2024 அன்று ஜெயராமன் அவர்கள் சிறப்பாக நடாத்தி இருந்ததுடன் நல்லூர் குமார வீதியை சேர்ந்த மயூரி என்பவரை மருமகளாக்கி மகிழ்ச்சியுற்றார். இரண்டாவது மகள் சைந்தவி 1988இல் பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை யாழ். இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலையில் கற்று, இடைநிலைக் கல்வியை யாழ். இந்துமகளிர் கல்லூரியில் பயின்று, பட்டப்படிப்பை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் பயின்று முடித்தார். தற்பொழுது செலான் வங்கியில் கடமையாற்றி வருகின்றார். இளையமகள் சாருகேசி 1989இல் பிறந்தார். ஆரம்பக்கல்வியை யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையில் பயின்று, இடை நிலைக் கல்வியை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கற்று யாழ் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து தற்பொழுது யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி வருகிறார். ஜெயராமன் அவர்கள் சாருகேசிக்கு கொக்குவில் மேற்கு, கேணியடியைச் சேர்ந்த மிறோஜன் என்பவருக்கு 07.09.2022 அன்று திருமண பந்தத்தில் இணைத்து வைத்த தோடு இவர்களுக்கு 14.07.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பிறந்த ஆண் குழந்தை ஆறகனை அன்பான பேரனாக கண்டுகளித்து ஏறக்குறைய 09 மாதங்கள் அவரோடு கொஞ்சிக்குலாவினார்.

**ஜெயராமன் அவர்களின் முதல் கச்சேரி**

ஜெயராமன் அவர்கள் தனது குருவின் மேற்பார்வையில் தனது 12ஆவது வயதில் தன் குலதெய்வமாகிய வண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயத்தில் (நாச்சிமார் கோவில்) முதல் வயலின் தனிக்கச்சேரியை சிறப்பாக நடாத்தி அனைவரது பாராட்டுக்களையும் நன்மதிப்பையும் பெற்றார். ஜெயராமன் அவர்களது முதல் கச்சேரி சிறப்பாக அமைவதற்கு முதற் காரணம் அவரது தந்தை அம்பலவாணர் அவர் தனது மகனுக்கு ஊக்கமும் ஆர்வமும் வழங்கியது மட்டுமன்றி முதற்கச்சேரிக்கு அணிசேர் கலைஞராகவும் பணிபுரிந்து பக்கபலமாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. ஜெயராமன் அவர்கள் 12 வயதிலிருந்தே அதாவது 1971 இல் தனது இசைப்பயணத்தை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டார். 1974ஆம் ஆண்டு இளங்கலைஞர் மன்றம் நாடாத்திய வயலினிசைப் போட்டியில் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக் கத்தைப் பெற்றார். இவரது குலதெய்வமாகிய "நாச்சிமார்" கோவில் நிர்வாக சபை 2011ஆம் ஆண்டு இவருக்கு "சுருதி வேந்தன்" என்னும் பட்டம் வழங்கி கௌரவித் தார்கள். சுருதியினை நுணுக்கமாக சேர்க்கும் ஆற்றல் கொண்ட தால் இப்பட்டம்இவருக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் 2012 ஆம் ஆண்டு பாரம்பரிய சுதேச வித்து வான்கள் ஊக்குவிப்புச் சங்கத்தினால் "வயலின் திலகம்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் 2014இல் மிருதங்க அரங்கேற்றத்தால் இவருக்கு சட்டநாதர் கோயில் வீதியில் அமைந்துள்ள கலாமண்டபத்திலே இளம் கலைஞர் மன்றத்தினரது அனுசரணையால் "இசைஞானசுரபி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ஆம் ஆண்டு நல்லூர் கந்தன் பெருந்திரு விழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகாசபை நடாத்தும் தெய்வீக தொடர் இசைப்பேருரையின் 30 வருட பூர்த்தியை முன்னிட்டு நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானத்தின் அருளாசியுடன் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் இசைப்பணியைப் பாராட்டி "சுபஸ்வரஞானபூஷணம்" என்னும் பட்டம் வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டார்.

2021ஆம் ஆண்டில் இலங்கை நாட்டின் 37ஆவது கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழாவில் கலந்து "கலாபூஷண" விருதினை ஜெயராமன் அவர்கள் பெற்றுக் கொண்டார். தனது குரு விட்டுச்சென்ற கலைப்பணியை இடை நிறுத்தாது கடைசிவரைக்கும் இசைப்பணிக்கே தன்னை அர்ப்பணித்து வந்தார். கடந்த 20 வருடங்களுக்கு மேல் இராமநாதன் நுண்கலைத் துறை (பல்கலைக்கழகம்), வட இலங்கைச் சங்கீத சபை இறுதிப் பரீட்சைகளில் வெளியேறும் மாணவர்கள் பலருக்கும் அணிசெய் கலைஞராக பங்கு கொண்டு பல மாணவர்கள் உருவாக்கத்திற்கு காரணமானவர். மேலும் ஈழத்தின் பல மன்றங்கள், கழகங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் தனது வயலின் இசையை ஒலிக்கச் செய்தவர். இறப்பதற்கு முதல்நாள் 07.04.2024 காலையில் ஒலிப்பதிவும் மாலை நிகழ்வு இலங்கைவேந்தன் மண்டபத்திலும் நடை பெற்றவேளை உடல் ஏலாமை ஏற்பட்டு தனது சொந்த வீட்டி லேயே ஓய்வெடுக்கச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது இறைவன் தனக்கு இசை மீட்க அழைத்ததுமே 2024.04.08 ஆம் திகதி நள்ளிரவு 12.25 மணியளவில் இறைபதம் எய்தினார்.

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி பிள்ளைகள் உள்ளத்திலிருந்து...

அப்பா!

நீங்கள் எங்கு சென்றீர்கள், - எங்கு

சென்றாலும் உங்கள் நினைவுகளுடன்

நாங்கள் உலாவித் திரிகின்றோம்.

ஒவ்வொரு நாளும் கடந்த காலங்களில்

எமக்காக நீவீர் செய்த தியாகங்களை

மனதுக்குள் எண்ணிப் புலம்புகின்றோம்.

இறுதி மூச்சு வரை உமது நாடித்துடிப்பாக

இருந்தது உங்களது வயலின் விரலிசை நாதம்

இன்று அந்த நாதத்தினைக் கேட்பதற்காக ஏங்கித்தவிக்கின்றோம்.

கமல் கமல் என்று ஓயாமல் கூப்பிடுவீர்களே...

இனி எப்போது அப்படிக் கூப்பிடப் போறீங்கள்

என் மனம் ஏங்கித் தவிக்கின்றது அப்பா.

பிள்ளைகளிற்காக ஓடி ஓடி உழைத்து கடைசிவரை

ஓய்வில் இருக்க மாட்டேன் என ஓடிநீர்களே அப்பா.

காலன் அவன் நீங்கள் ஓடியது போதும் இனி

என் மடியில் நீ ஓய்வெடு என்று அழைத்து விட்டான்.


நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள்

ஆசீர்வாதமும் அரவணைப்பும் எம்முடன் இருக்கும் அப்பா.

உங்கள் ஆத்மா காமாஷ்சி அம்பாளின் பாதங்களில்

சாந்தி அடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு சர்வேஸ்வரசர்மா அவர்களுடன் அமரர் அ.ஜெயராமன் அவர்கள் வழங்கிய வயலின் சோலோ நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களுடன் அமரர் அ.ஜெயராமன் அவர்களின் வயலின் சோலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்
### (ரகுநாதன் சந்தானலட்சுமி, இராமச்சந்திரன் (பவா) ஸ்ரீனிவாசன், சரஸ்வதி (சரஸ்)

அண்ணை அக்கா சின்னத்தம்பி சின்னத்தம்பி என்று ஆசை ஆசையாய் கூப்பிட்டோமே அன்றும் பகல் போன் எடுத்தோம் கதைக்கவில்லை. பின்னர்தான் தெரியும் நீ மேடையில் வயலின் வாசித்துக் கொண்டு இருந்தாய் என்று கடைசியில் உன் குரலை கேட்கவில்லையே.... கண் கலங்குது சின்னத்தம்பி. நாங்கள் யாழ் வந்ததும் பார்த்து கதைத்து பின்னர் வீட்டை வந்து சாப்பிட்டுப் போங்கோ என்று அன்பாய் கூப்பிடுவியே சாப்பிட்டதை எல்லாம் மறக்க முடியாமல் உள்ளது.

சகோதரர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வந்தவுடன் எள்ளுப்பாகு தொடக்கம் யாவும் வாங்கிக் கொடுப்பீர்களே எல்லோரும் உங்களை நினைத்து கவலையுடன் இருக்கிறார்கள். இனிஎப்போ காண்போமோ என்று.

ஸ்ரீ சின்னண்ணை உங்களை பார்க்க அம்பாளின் திருவிழாவுடன் வந்து பார்ப்போம் என இருந்தேனே கடைசியில் நேரே பார்த்து ஆறுதலாக கதைக்க கிடைக்கவில்லையே தவிக்கின்றேன். நாங்கள் யாவரும் லண்டனில் இருந்து வந்தும் உடன் வந்து பார்த்து கதைத்து உங்கள் வீட்டிலும் கூப்பிட்டு பாசமாய் சாப்பாடு தந்து அனுப்புவீர்களே ஒன்றையும் மறக்க முடியாமல் உள்ளது.

உங்களது வயலின் சோலோவுக்கு அண்ணையும், நானும் பல வாத்தியங்கள் பக்கவாத்தியமாக வாசித்தோம். அந்த பசுமையான நினைவுகளை மறக்கமுடியாது. சிறிது, பெரிது என்ற பாராமல் யாவருக்கும் பக்கவாத்தியம் வாசிக்க ஓம் என்ற சொல்லுவீர்கள். எல்லோரும் உங்களை மறக்க மாட்டார்கள் சின்னண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவா சரஸ் சின்னண்ணை பக்கத்தில் இருக்கிறாரே என ஆறுதலாக இருந்தோம். ஏலாத நேரத்தில் கூட சாப்பாடு கொண்டு வந்து தருவீர்கள் எங்களை நினைத்தவுடன் வந்து கூப்பிட்டு பார்க்காமல் போக மாட்டீர்களே... அல்லது போன் எடுத்து என்ன செய்கிறீர்கள் என கேட்பீர்கள். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து எங்கள் வீட்டுக்கும் வந்து வாசலில் ஏறும் பொழுதே ரீ யை போடு சரஸ் என சொல்வீர்கள். பின்னர் இருந்து ஆறுதலாக கதைத்துவிட்டு போவீர்கள்.

நினைவுகளோ பற்பல....

இப்பவும் கூட கோயில்களில் ஒலி பெருக்கியில் பாட்டு போடும் பொழுது ஏதாவது ஒரு பாட்டிலாவது உங்களது வயலின் இசை கேட்கத்தான் செய்கிறது. இனி வாசிப்பை நேரில் பார்க்க மாட்டோமே என ஏக்கமாக உள்ளது சின்னண்ணை.

அன்று ஏலாமல் இருக்கும் பொழுது நாங்கள் பார்க்க வந்தோம் என்ன செய்யுது என கேட்க படுக்க சரியாக இருக்கும் எனச் சொல்லி ஒன்றும் சொல்லாமல் போய்வீட்டீர்களே. உங்கள் முகத்தை நினைக்க நினைக்க கண்ணீராக ஓடுகிறது....

எழுதும் பொழுதும் கூட உங்களது மோட்டார்சைக்கிள் கோன் கேக்கிற மாதிரியே உள்ளது. வீட்டுக்கு வருவீர்கள் என எதிர்பார்த்து ஏமாறுகின்றோம். அழுகையாக உள்ளது. இனி எப்போ காண்போமோ.... உங்களது ஆத்மா சாந்தியடைய அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீருடன்
பாசமுள்ள சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர், யாழ்ப்பாணம் - இலங்கை

**Nallai Thirugnanasambanthar Atheenam**

**Nallur, Jaffna - Srilanka**



ஸ்தாபிதம் - 1966 021222 2870 திகதி 03/05/2024

## அனுதாபச் செய்தி

அன்புள்ளங்களுக்கு!

வயலின் ஜெயராமனுடைய மறைவு இசைக் கலைஞர்களுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் மீளாத் துயர் தந்திருக்கின்றது. இசைப் பாரம்பரியக் குடும்பத்தில் வந்த இவர் - நரம்பு வாத்திய இசையில் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவர். பெருங் கலைஞர்களுக்கு ஓர் அணி சேர் கலைஞனாக இருந்து கலைச் சேவை புரிந்தவர். தாளம், சுருதி பிசகாமல் சிறுவர் முதல் பெரியோர் வரை பாடும் போதும் "சுருதி வேந்தன்" தன் இசை மெட்டில் பாரபட்சம் பார்க்காது கலை சேவை புரிந்தவர். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின் றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை உலகின் பேரிழப்பு...

இசை உலகின் தனித்துவமான பங்களிப்பைச் செய்து வந்த கலாபூஷணம் அம்பலவாணர் ஜெயராம் மறைந்த செய்தி இசையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். நூலகர் வாழ்க்கைத் தொழிலாக அமைந்த போதும் மேலைத்தேய இசைக் கருவியாகிய வயலினை கையிலேந்தி கீழைத்தேச இசை உலகில் ஜாம்பவானாக திகழ்ந்த ஜெயராம் அவர்கள் ஈழமணித் திருநாட்டில் இசை நிகழ்வில் அணிசெய் கலைஞராக பணியாற்றி இசை நிகழ்வுகளை உயர்வு படுத்திய ஜெயராம் அவர்களின் மறைவு இசைபாடும் தமிழிற்கு பேரிழப்பாகும்.

திரு.அ.ஜெயராம் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம பணியில் தன்னையும் இணைத்து ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் அவரது நெறிப்படுத்தலில் சிறந்ததோர் இசைவேள்வி அரங்கேறி வந்ததை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். திரு.அ.ஜெயராம் அவர்கள் தனது இசைக் கலையை தானும் வழங்கியதுடன் பலமாணாக்கர்களை இசை யுலகில் வாழவைத்தமை அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார் என சந்நிதிவேற்பெருமானை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள்
சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு
04.04.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com

T.P No : 021 - 3213151

திகதி: 07.05.2024

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி


கலை நிறைந்த வண்ணை நாச்சிமார் கோவில் சூழலில் பிறந்து மிகப் பிரசித்தி பெற்ற வயலின் வித்துவானாக திகழ்ந்து திடீரென மறைந்த வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் பிரிவு குறித்து மிகவும் மனம் வருந்துகின்றேன். கலை இன்பமே நிலை இன்பமாக கொண்டு மிகச் சிறிய வயதில் மேடை ஏறிய இக் கலைஞர் சாதித்தவை ஏராளம். வயலின் இசைத் துறையில் உவமையில்லாத கலைஞராக வலம் வந்தவர். பண்பால், பணிவால், அன்பால், ஆற்றலால், ஆளுமையால் அனைவரையும் அரவணைத்த அற்புதக் கலைஞர். இக் கலைஞரோடு சுமார் 40 ஆண்டு காலம் பழகும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அன்னாரின் தந்தை மிகப் பெரிய வித்துவான் அம்பலவாணர் அவர்களை அறியாதவர்கள் இல்லை. தொடர்ந்து திரு.ஜெயராமன் அவர்களோடும் பழகும் சந்தர்ப்பமும் கிட்டியது.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 1998 முதல் நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் தினமும் என்னைச் சந்திப்பார். அன்பாக அளவளாவி மகிழ்வார். எத்தனையோ அரங்குகளில் அவரை நான் சந்தித்த அனுபவமுண்டு. யாழ். மாநகரசபையில் இருந்து இளைப்பாறி விட்டேன். இனி முழு நேர இசைப்பணி என்றவர் திடீரென எம்மை விட்டுச் சென்று விட்டார். கடைசி நாள் வரை அரங்கத்தில் தன் ஆற்றலைக் காட்டிய இவர் அற்புதக் கலைஞரை இறைவன் தனக்கருகில் எடுத்து விட்டான். என் செய்வது விதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் சொல்வது. பிறப்பும் இறப்பும் இறை நியதி வாழும்போதே பலருக்கு பயனாக வாழ்வது மானிடத்தின் வெற்றி எனலாம். கலையில் பலரை அரவணைத்த மாபெரும் கலைஞர் ஜெயராமன் மண்ணை ட்டுச் சென்று விட்டார். விண்ணுலகில் அவரது வித்தை தொடரட்டும். அவரது ஆத்மா சாந்தியடைய துர்க்கையம் மனைப் பிரார்த்திக்கின்றேன்.



கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை




***"உங்களது அனைத்து உழைப்பையும கடைசி நேரத்தில் கைவிட்டா ' உலகம் உங்களை ஒருபோதும் அறியாது."***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அ.ஜெயராமன் அவர்களின் அரசபணி கடமைகளும் கௌரவிப்புகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

மெய்ப்பொருள் காண்பது அறிவு


***Professor. S. Srisatkunarajah***
***Vice Chancellor***
*B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,*
*Professor in Mathematics*


எமது இல.
මගේ අංකය
My Number

உமது இல.
ඔබේ අංකය
Your Number

Date : 11.04.2024

---

# நாதயோகி ஜெயராமன்

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை யமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சேலன்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே!

அமரர் ஜெயராமன் காமாட்சி அம்பாளின் அருளாட்சியில் இசைக் குடும்பத்தில் பிறந்து நல்லதொரு வயலின் வித்துவானாகத் திகழ்ந்து இசைவடிவான "நாதப்பிரம்மம்" என்று அறியப்படும் இறைவனுக்கு தான் பங்குபற்றும் இசைநிகழ்ச்சிகள் மூலம் இசை வழிபாடு இயற்றி "நாதயோகி" என பலரும் போற்றத்தக்க ஒருவராகத் திகழ்ந்தார்.

அபிராமிப்பட்டரின் கூற்றுப்படி காமாட்சி அம்பாள் நரம்பையொட்டி இயங்கும் இசையின் வடிவாகத் திகழும் தலைவி. இசைக்கும் நமது நரம்பு மண்டலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தாலாட்டுப் பாடல் குழந்தையின் நரம்பு மண்டலத்தில் உரிய விளைவை ஏற்படுத்தி தூங்கச் செய்கின்றது. நீலாம்பரி இராகம் பெரியவர்களையும் உறங்கச் செய்கின்றது. பூபாளம் விழித்தெழச் செய்கின்றது. புன்னாகவராளி பாம்பின் நரம்பு மண்டலத்தில் செயற்பட்டு அதனை ஆடச் செய்கின்றது. இசை நரம்பு மண்டலத்தில் நல்ல விளைவை ஏற்படுத்துவதால் "நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகி" என அம்பாள் அபிராமிப் பட்டரால் அழைக்கப்பட்டாள். இவ்வகையில் காமாட்சி அம்பாள் தனது ஆலயத்தின் சூழலில் இசைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் மிருதங்க வித்துவான் அம்பலவாணரின் மகனாக அவதரித்த ஜெயராமனை தனது சேவகனாக தேர்ந்தெடுத்து அவர் நரம்புக் கருவிகளில் சிறப்பான வயலின் மூலமாக சுருதியோடு இசை எழுப்ப இடையறாது அருள்சுரந்தான். காமாட்சி அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று நல்லதொரு வயலின் வித்துவானாகத் திகழ்ந்த ஜெயராமன் தனது இசைப் பணியினை இறைபணி எனத் தலைமேற் கொண்டு பல மாணவர்களுக்கு சிறந்த குருவாகவும், சக கலைஞர்களுக்கு ரம்மியமான சுருதி சேர்க்கும் விற்பன்னராகவும் இருந்து வந்தார். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் ஏனைய கலை நிகழ்ச்சிகளிலும் சிறப்புற உற்சாகத்துடன் வயலின் இசையினை உவந்து அயராது உழைத்த நண்பனாகவும், எளிமையுடனும், மகிழ்வுடனும் மிளிர்ந்து யாழ் அன்னையின் ஒரு மான்பு மிக்க இசைக் கலைஞனாகத் திகழ்ந்தார்.

யாழ் அன்னையின் இதயமாகத் திகழும் யாழ்ப்பாண பொது நூலகத்தில் தனது உத்தியோகப் பணியினை கடமை உணர்வுடன் மேற்கொண்டு வாசகர்களினதும் சக ஊழியர்களினதும் நன் மதிப்பைப் பெற்றிருந்தார். அவரது சிறந்த நூலகப் பணி புத்தகத் தாயான கலைவாணியின் அருளையும் பெற உதவியாக அமைந்தது. இச்சிறப்பு அவரது கலை வாழ்வை மேலும் மிளிரச் செய்தவண்ணமிருந்தது. இவ்வாறாக வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக வளர்ந்துவரும் ஒரு வயலின் இசைவல்லுனராகத் திகழ்ந்து இசைவடிவான இறைவனுக்கு நாதஉபாசனை உவந்த நாதயோகி எனப் போற்றப்பட்டார்.

நல்லுள்ளம் கொண்ட ஜெயராமன் தனது பிரியமான மனையாளுக்கும், பிள்ளைகளுக்கும் சிறந்தவொரு குடும்பத் தலைவனாகவும், உற்றார் உறவினர்களுக்கு அன்பான நலன்விரும்பியாகவும், சகபாடிகளான இசைக் கலைஞர்களுக்கு உரிமையுடைய தோழனாகவும், யாழ் சமூகத்திற்கு உவகையுடன் இசை பொழிந்த வயலின் வித்துவானாகவும் பல்பரிமானங்களில் சிறப்புச் செய்த பெருந்தகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இசை உபசணையால் தன்னை மகிழ்வித்த அன்பே உருவான ஜெயராமனை அரம்பை அடுத்த அரவையர் சூழவந்து காமாட்சி அம்பாள் திடீரென அழைத்துச் சென்றுவிட்டாள். அவரது பிரிவினால் துயருற்றிருக்கம் குடும்பத்தினர், நண்பர்கள், மாணவர்கள் ஆறுதலடையவும் ஆத்மா சாந்திக்காகவும் எமது பிரார்த்தனைகள்.

பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா
கணிதப் பேராசிரியர், துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


த.பெ. எண் 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
තැ.පෙ. අංකය 57, තිරුනෙල්වෙලි, යාපනය.
P.O. Box 57, Thirunelvely, Jaffna.
Telephone : +94 212 222 294
+94 212 222 006
Fax : +94 212 222 294
E-mail : vc-office@univ.jfn.ac.lk
Website : www.jfn.ac.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றம்
## ILAM KALAIGNAR MANRAM

பதிவு இல : No HA/ 8 TA/9/95 - 2001 - 04 - 04
Phone No : 021 222 5331

சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Saddanathar Road,
Nallur, Jaffna.


04./05./2024


**நிறுவுனர்**
திரு.பொன்.சுந்தரலிங்கம்

**காப்பாளர்கள்**
திரு.ஆறுதிருமுகன்
திரு.சோ.பத்மநாதன்
திரு.சு.பாலசண்முகநாதன்

**தலைவர்**
திரு.சி.வி.கே.சிவஞானம்

**துணைத் தலைவர்கள்**
திரு.E.S.Pநாகரட்ணம்
திரு.S.பத்மலிங்கம்
திரு.V.K.பஞ்சமூர்த்தி
திரு.M.சிதம்பரநாதன்
திரு.N.R.S.சுதாகரன்
திரு.ச.சிவானந்தன்

**சர்வதேச தொடர்பாளர்**
திரு.S.பத்மலிங்கம்

**செயலாளர்**
திரு.ந.செல்வச்சந்திரன்

**உப செயலாளர்**
திரு.க.சோமசேகரம்

**பொருளாளர்**
திரு.ச.சிவகுமாரன்


# இனிய பண்பாளன் கலைஞன் "சுருதிவேந்தன்" அ.ஜெயராமன்.

நிலையில்லா நீர்க்குமிழி போன்றதுதான் மனித வாழ்க்கை இயற்கையின் நியதி என்பதில் எதுவித மாற்றமும் இல்லையென்பதை வள்ளுவன் தனது குறளில் தெளிவுபடுத்தியுள்ளான். ஆகவே இறப்பினால் நாம் உறவுகளைப் பிரிந்த போதிலும் நினைவுகள் என்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அவ்வழியில் யாழ். நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த பாரம்பரிய கலைக் குடும்பத்தில் அ.ஜெயராமன் அவர்கள் பிறந்து வளர்ந்து வயலின் வாத்திய இசையிலும், அரச சேவையிலும் பணியாற்றியுள்ளார். நான் மாநகர சபையில் ஆணையாளராக கடமையாற்றிய காலத்தில் நூலக சேவை மிகமிகச் சிறப்பாக செயற்பட்டமைக்கு அமரர் அ.ஜெயராமன் அவர்களது சேவை மகத்தானது. செய்யும் தொழிலே தெய்வமெனக் கொண்டு தனக்கிடப்பட்ட பணியினை செவ்வனவே செய்து முடிக்கும் இயல்புடையவர். அத்துடன் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தையும் ஊக்கப்படுத்தியவர்.

மேலும் ஈழத்தின் வயலின் கலைஞர்கள் வரிசையில் அமரர் அ.ஜெயராமன் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விரல்விட்டுச் சொல்லக்கூடியவராக திகழ்ந்துள்ளார். அவர் கானாத மேடைகள் இல்லை எனலாம். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பண்பாக உரையாற்றி மன்றத்தின் கலைநிகழ்வுகள் அனைத்திலும் தன்னாலான பங்களிப்பை வழங்கிய கலைஞன். இவரின் மறைவு இடைவெளி நிரப்ப முடியாதது. ஈழத்தின் தோற்றம் பெற்ற பல இறுவட்டுக்களில் அமரர் அ.ஜெயராமனின் வயலின் இசையும் இணைந் திருப்பது அவருடைய தனிச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

சிரித்த முகமும் இனிய பண்புகளும் ஒருங்கிணையப் பெற்ற "சுருதிவேந்தன்" அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி அவரோடு பழகிய அனைவருக்கும் பேரிழப்பாகும். வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் அ. ஜெயராமன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப்

பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

CVK சிவஞானம்.
அவைத்தலைவர்
வடமாகாண சபை.
தலைவர்,
இளங்கலைஞர் மன்றம் நல்லூர்.



*"ஒருபோதும் உங்களை நியாயப்படுத்திக் கொள்ள பிறரை காயப்படுத்தி விடாதீர்கள்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்
# நாச்சிமார் கோவிலடி

வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலயம் தனது சமூகப் பணிகளை சிறப்பாக ஆற்றிவரும் இக்காலத்தில் அதன் ஒரு காத்திரமான உறுப்பினராக அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் குறிப்பிடக்கூடியவர். இவரது தந்தையின் வழியில் கலையை மூச்சாகக்கொண்டு வாழ்ந்தவர். வயலின் கலைஞரான இவர் கலை எண்ணம் கொண்டு வாழ்ந்தாலும் ஒரு கலைஞன் தான் வாழும் சமூகத்தைப் பற்றிய ஆழமான புரிதலோடு அந்த சமூகத்தின் மீதான விருத்தி எண்ணங்களை தடங்களாகக் கொண்டு வாழவேண்டும் என்பதற்கு ஒரு உதாரணமாக வாழ்ந்தவர்.

எமது சனசமூக நிலையத்தில் சாதாரண ஒரு அங்கத்தவராக தன்னை இணைத்துக்கொண்டு தனது சமூகத்திற்கான பணிகளை ஆற்றியவர். இவரது தொடர் செயற்பாடின் வீச்சினால் காமாட்சி சனசமூக நிலையத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்கும் சூழல் கிட்டியது. அதை பொறுப்புடனும் மகிழ்வுடனும் செவ்வனே செய்தார். இவர் யாழ் பொது நூலகத்திலும் பணியாளராய் இருந்தமை இவரது சனசமூக நிலையச் செயற்பாட்டிற்கும் உந்து சக்தியாக அமைந்தது எனலாம். சனசமூக நிலையத்தின் ஊடாக வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளின் ஆலய உற்சவ காலத்தில் இசையரங்குகளையும் நிகழ்த்தினார். இப்பணியானது இளைய தலைமுறையினருக்கு கலையார்வத்தினையும் பண்பினையும் ஏற்படுத்துவதாய் அமைந்தது. இவரது நிதானமான தலைமைத்துவப்பண்பு சீரான செயற்பாட்டினை தோற்றுவித்தது. சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, விளையாட்டுத்துறை என பல பணிகள் சிறப்புற நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக காமாட்சி சனசமூக நிலையத்தின் 25ம் வருட வெள்ளிவிழா நிகழ்வுகள் இவரது தலைமையில் சிறப்புற இடம் பெற்றமையை குறிப்பிடலாம். இது ஒரு பெருநிகழ்வாக அந்நேரத்தில் அமைந்திருந்தது.

ஒரு கலைஞனாக, தலைமைப்பண்புள்ள ஒரு நிர்வாகியாக சிறப்புமிக்க சேவைகளை ஆற்றிய அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் இறைவனின் பாதங்களில் ஆத்ம சாந்திபெற நிலையத்தின் சார்பில் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கோ. சத்தியன்.
தலைவர்.
ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்.

***"விதியின் சதிகளை தாங்கிக் கொள்வது தான்***
***அதை வெற்றி கொள்வதற்கான வழி.!"***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் வழங்கிய அஞ்சலி உரை

மேலைத்தேய வாத்தியமாக அமையும் வயலின் மேற்கத் தேய இசையிலும், கீழைத்தேய கர்நாடக இசையிலும் வாழ்வு பெற்ற வாத்தியமாகத் திகழ்கிறது. வயலினை இசைக் கச்சேரிகளில் இலாவகமாகக் கையாளும் மூத்த இசையாளர்களுள் அமரர் சுருதி வேந்தன் அம்பலவாணர் ஜெயராமனுக்குத் தனிச் சிறப்புண்டு.

சிறந்த இசைப் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் என இசைத்திறமை பெற்றிருந் தாலும் வயலின் இசையே இவருக்குரிய தனித்துவ அடையாள மாகத் திகழ்கிறது.

எமது கலாசாலையில் நிகழ்ந்த பல்வேறு ஆற்றுகை நிகழ்வு களிலும் பிரதான பக்க வாத்தியமாக வயலின் இசையை வழங்கி சிறப்புச் சேர்த்தவர் இவர். இவரது புதல்வி சாருகேசி எமது கலா சாலையில் உடற்கல்வித் துறையில் பயிற்சி பெற்ற மாணவி. இசை யார்வம் மிக்கவர். மகளால் ஏற்பட்ட தொடர்பு கலாசாலைக்கும் அவருக்குமான உறவை இன்னும் நெருக்கமாக்கியது.


யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பல்வேறு கலை நிகழ்வு களிலும் பங்கேற்கும் பாக்கியம் எனக்கு இருப்பதால் அவருக்கும் எனக்குமான தொடர்பும் இறுக்கமாக விளங்கியது. இசை மீட்டிய வாறே இவரது உயிரின் பிரிவு நேர்ந்ததை இசைக்கும் அவருக்கு மான அந்நியந்தத் தொடர்பை எடுத்துக்காட்டுவதாகக் கொள்ள முடிகிறது. கலைஞர் ஜெயராமன் மறைந்தாலும் அவர் ஆற்றிய கலைப் பங்களிப்பு அவரது இசையாக இம் மண்ணில் என்றும் நிலைத் திருக்கும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அ.ஜெயராமன் அவர்களின் பல்கோண இசைப் பங்களிப்புகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அ.ஜெயராமன் அவர்களின் பல்கோண இசைப் பங்களிப்புகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவாணர் கண்ணன் அவர்களின் கலையகத்தில் இசையமைக்கும் வேளையில் அமரர் அ.ஜெயராமன் அவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாயிராம்

அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் மிக நீண்ட காலமாக இசையோடும், என்னோடும் இசைந்து பயணித்தவர். மெல்லிசைத் துறையிலும் நாடகத்துறையிலும், ஈழ விடுதலைப் பாடல்களிலும், இந்து, கிறிஸ்தவ பக்தி இசைத்துறையிலும் நாட்டிய அரங்குகளிலும் கர்நாடக இசை மரபிலும் வயலின் இசையோடு கூடவே இறுதிவரை பயணித்தவர். ஈழத்து இசைப் பரப்பில் ஜெயராமன் அவர்கள் மறந்து விட முடியாத ஒரு இசை அடையாளம். இலங்கையின் பல பாகங்களிலும் இவரது வயலின் இசையை பொழிந்திருக்கிறது. **1976**ம் ஆண்டின் பிற்பாடு எனது பலபடைப்புக்களுக்கு வயலின் இசைக் கலைஞராக இசைப்பணி செய்தவர். சுருதி சுத்தமான வாசிப்பினையும் அதனூடாக பாவ உணர்வுகளையும் கிளர்ந்தெழச் செய்யும் அபாரமான ஆற்றலை பெற்றவர். புன்சிரிப்பும் மற்றவரை மதிக்கும் பண்பும் எப்போதும் கூடவே இவரோடு இருக்கும். எவருக்கும் தீங்கெண்ணும் மனம் இவரிடம் நான் காணாத ஒன்று. நல் மனம் கொண்டோர் இறைவனால் அதிகம் விரும்பப்படுவர் என்பதை இறைவன் இவர் மூலம் நிரூபித்துத் தன்னிடத்தில் அமைத்துக் கொண்டார். அன்னாரின் ஆத்மா இறையிடத்தில் அமைதிபெற பணிவான பிரார்த்தனைகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இசைவாணர்
கண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மறைந்தார் மாண்பு”

“கலாபவனம்”
கொக்குவில்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றிற் தோன்றாமை நன்று

எனும் வள்ளுவர் திருவாக்கிற்கு இணங்க கலாபூஷணம், சுருதி வேந்தன் திரு. அம்பலவாணர் ஜெயராமன் சேர் அவர்கள் இசைக்குடும்பத்தில் பிறந்து தனது சாதனைகளை கலையுலகம் அறியச் செய்த மஹாவித்துவான். அவர் இசையுலகிலும் சரி, நாட்டிய உலகிலும் சரி பொது சமூக தளங்களில் கூட அவரை அறியாதார் இல்லை என்றே கூறலாம். அவர் தனி வாத்தியக் கச்சேரியாகிலும் சரி, இசை நாட்டியக் கச்சேரி ஆகிலும் சரி அணிசேர் கலைஞர்களாக அரங்கை அலங்கரித்தவர். அவரை அறியாதவர் இல்லை என்றே கூறலாம். அவர் இசைவித்து வான்களுடனும் சரி, நாட்டிய ஆசிரியர்களுடனும் பழகும் முறையே தனி. எனது நாட்டிய நிகழ்ச்சிகளில் அவர் பரிட்சயமாகி கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு மேலிருக்கும் என நினைக் கின்றேன்.

அவர் பெரியவர்கள் சிறியவர்கள் என வேறுபாடின்றி எல்லோருடனும் இயல்பாகவும் அன்பாகவும் அத்துடன் வித்து வச் செருக்கின்றிப் பழகும் ஒரு நல்ல பண்பாளன். அவரின் வித்துவம்தனி இன்னும் சில காலம் எம்முடன் வாழ்ந்திருக்கலாம், ஏனோ காலதேவனின் கணக்கு வந்ததும் அவர் இறைவன் தாளில் அமைதிபெற சென்று விட்டார் போலும். இருந்தாலும் அவர் இன்று நம்மிடையே இல்லை தான், ஆனாலும் கலையுலகில் என்றும் பேசப்படும் ஒரு கலைஞன். அவருடைய இழப்பு குடும்பத் தாருக்கு மாத்திரமல்ல எங்களுக்கும் பேரிழப்பாகும். பிறந்தவர் வந்த கடமை நிறைவுற்றதும் இறப்பது நிச்சயம். இது தவிர்க்கமுடி யாதது. அவரின் ஆத்மா என்றும் இறைவன் சன்னிதியில் அமைதி பெற பிரார்த்திப்போமாக - இழப்பு கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்று.

குடும்பத்தாரின் துக்கத்தில் பங்கு கொள்ளும்...
ஸ்ரீமதி - சாந்தினி சிவநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாச்சிமார் கோயிலடி நாதமணி ஓய்ந்து விட்டது.

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய அம்பலவாணர் குடும்பத்தில் ஒரு தனிப்பாசம். அனைவருமே அன்புள்ளங்கள் தான். மூத்தவர் இரகுநாதன் எமது தந்தையாருடனும் என்னுடனும் மிகவும் அன்புடன் பழகும் தன்மை உடையவர். அடுத்தது ஸ்ரீநிவாசன். மற்றது ராமச்சந்திரன் (பவா) பொதுவாக எல்லோருமே அன்பின் பிறப்பிடங்கள்.

இவர்களிடையே அமரர் ஜெயராமன் தனிப்பண்பு கொண்டவர். எல்லோரிடமும் இனிமையாகப் பழகுபவர். அவர் மறைந்த செய்தி கேட்டு ஒருகணம் திகைத்து நின்றுவிட்டேன். நம்ப முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை நாச்சிமார் கோயிலடி கலைகளுக்குப் பேர்போன இடம் இங்கே என்ன இல்லை? எல்லாம் இருக்கிறது.

பல்வேறுபட்ட கலைஞர்களின் வாழ்விடமான எங்கள் நாச்சிமார் கோவிலடி நாதமணி ஓய்ந்து விட்டது. இனிய நல்ல நாதமாக ஜெயராமனின் கைவிரல்களில் பிறந்த வயலின் இசை திடீரென்று சத்தம் நின்றுவிட்டது. அவருடைய வயலின் சோலோ இப்போதும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

சிந்தனையில் நல்ல நாதகீதமாய் ஏழிசையுடன்
சீரோடு இசை எழுப்பும் கை விரல்கள் எங்கே?
உந்தனை நினைக்கையிலே உள்ளமே தடுமாறுகிறதே
ஊரோடு வாழ்ந்து பேரோடும் புகழோடும்
கந்தனைக் கரங்குவித்துக் காலமெல்லாம் இசை பரப்பி
காதுகளை நிறைத்திட்ட ஜெயராமனே எங்குற்றீர்?
வந்தனை செய்கின்றோம் வண்ணை காமாட்சி அன்னையை
பெற்றிடுக சாந்தி அவனடியில் அமைதியுடன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் மறைவு இசையுலகுக்கே பேரிழப்பாகும். வில்லிசைக் கலைஞரான சிறயேனுக்கு ஜெயராமன் அவர்கள் காட்டிய அன்பு பவித்திரமானது றேடியோவில் எனது வில்லுப்பாட்டைக் கேட்டு விட்டு உடனே என்னிடம் வந்து "ஸ்ரீ அண்ணா! நன்றாக இருந்தது. வில்லுப்பாட்டு நகைச்சுவை கலந்திருக்க வேண்டும். இதைக் கவனிச்சால் இன்னும் சிறப்பு வரும்" என்று கூறியது நன்றாக நினைவிலிருக்கிறது. அத்தகைய ஒரு நல்ல இதயமுள்ள கலைஞரை இழந்து விட்டோம்.

நினைக்க நினைக்க அழுகைதான் வருகிறது. அவருடைய உடம்புதான் மறைந்ததே

ஓம் சாந்தி!

- கலாபூஷணம் -
"தெய்வத் தமிழ்ச் சுடர்"
இராசையா ஸ்ரீதரன்
(தேவார ஓதுவாரும் எழுத்தாளரும்
வில்லிசைக் கலைஞரும்)

இராஜேஸ்வரி அன்புச் சோலை
செம்பருத்தி இல்லம்
அச்செழு
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
யாழ்ப்பாணம்.

*ஒரு வேலையை செய்யும் முன் எதற்காக செய்கிறோம்*
*என்ற வலிமையான காரணம் வேண்டும்..*
*அப்போது தான் நம் லட்சிய பாதையில் இருந்து*
*விலகி செல்ல மாட்டோம்.!"*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில்
# அமரர் ஜெயராமன்

ஆயிரத்தி தொளாயிரத்தி எழுபத்தி நான்காம் ஆண்டு (1974) வயலின் வித்துவான் அமரர் சர்வேஸ்வர சர்மாவினது வீட்டில் அறிமுகம் ஆனார். அமரர் ஜெயராமன் அவர்கள் இளமையில் துடிப்பும் சுறுசுறுப்பும் உள்ள அவர் வயலின் வாத்தியத்திலும் வல்லவர் ஆகத் திகழ்ந்தார். அவர் வல்லவர், நல்லவர், துடிப்பானவர், சுறுசுறுப்பானவர், மனிதாபிமானம் உடையவர், சாதனையாளர், கணீர் என்ற அவருடைய வயலின் வாத்தியத்தின் சுருதியில் நீந்தும் ஸ்வரஸ்தானங்கள். முத்து முத்துக்களாக மிளிர்ந்து ஜொலிக்கும். சுருதியை உணர்ந்து கொள்ளும் திறன் உடைய அவர் "சுருதி வேந்தன்" எனும் பட்டத்தையும் பெற்றார். இசை மாணவர்கள் முதலாக முதுபெரும் இசைக்கலைஞர் வரை வயலினை பக்க வாத்தியமாக வாசித்து பெயர் பெற்றவர். நாட்டிய அரங்கேற்றங்களாயினும் மிருதங்க அரங்கேற்றமாயினும், அவ் அரங்கேற்றங்களை தனது வயலின் இசையால் மெருகூட்டி பாடகர்களுக்கு அனுசரணையாகவும் உறுதுணையாகவும் இருந்து வெற்றியடையச் செய்யும் வித்துவானாவார்.

இசை பயிலும் மாணவர்களை தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்தி கற்பிக்கும் ஆற்றலும் வாசிக்கும் ஆற்றலும் உடையவர். குருபக்தி நிறைந்தவர். இறுதிவரை தனது குருவிற்கு ஒத்தாசை ஆக இருந்தவர். பொதுவாக யாழ்ப்பாண குடாநாட்டில் நடை பெறுகின்ற நடன அரங்கேற்றங்கள், நடன நிகழ்ச்சிகள், மிருதங்க அரங்கேற்றங்கள் - இசைநிகழ்ச்சிகள் ஆகியவற்றில் வயலினுடன் அமரர் ஜெயராமன் அவர்களே காட்சியளிப்பார்.

நான் அமரர் ஜெயராமனுடன் எட்டுக்கு மேற்பட்ட நடன அரங்கேற்றங்களும் நூற்று அறுபத்து ஐந்துக்கு மேற்பட்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியக் கலாவித்தகர்க்கும் பாடியுள்ளேன் இதனை தவிர பல இசைக்கச்சேரிக்கும் எனக்கு ஜெயராமன் அவர்கள் பக்கவாத்திய மாக அணி செய்து இருக்கிறார். பணத்திற்காக அன்றி மனிதத் திற்காக வயலின் வாசித்த பண்பாளன். அவர் கடைசியாக திலகநர்த்தனாலயாவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாட்டிய நிகழ்ச்சி இலங்கை வேந்தன் மண்டபத்தில் ஏப்ரல் மாதம் 07ம் திகதி நடைபெற்ற போது எனக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்தார். அவர் கடைசியாக வாசித்த உருப்படி முருகன் மேல் பாடப்பட்ட கல்யாணி இந்த இராகம் ஆதி தாளத்தில் செய்யப் பட்ட "மயிலே நீ விரைந்து செல்லு..." எனும் பதமாகும்.

இவ்வாறான ஆற்றலும் ஆளுமையும் மனிதமும் நிறைந்த அமரர் ஜெயராமனது இழப்பு கலை உலகத்திற்கு குறிப்பாக இசை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரது மனைவி, பிள்ளைகள், உறவினர் இத்துயரில் இருந்து மீள இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்தித்து அவரது ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சங்கீத வித்துவான் பொன.ஸ்ரீ.வாமதேவன்
இடைநிலை விரிவுரையாளர்
இராமநாதன் பல்கலைக்கழகம்




***"பல பிரச்சனைகளை சந்தித்தவனை பார்த்தால் தோல்வி கூட துவண்டு போகும்."***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருதிவேந்தன் அமரர் அ.ஜெயராமன் அவர்களுக்கு வழங்கிய கௌரவ விருதுகளும் சான்றிதழ்களும்



கலாபூஷண
அரச விருது விழா
2021

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டினால்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்

ஒழுங்கு செய்யப்பட்டு

2022 ............................ ஆந் திகதி நடாத்தப்பட்ட

கலாபூஷண அரச விருது விழாவின் போது

இலங்கையின்

கலைத்துறையின் வளர்ச்சிக்காக ஆற்றப்பட்ட

சிறந்த சேவைக்கு

புகழளிக்கும் வண்ணம்

திரு / திருமதி / செல்வி

............................................................

என்பவருக்கு கலாபூஷண அரச விருது வழங்கப்பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்திற்கு சொந்தமாகிப்போன
# "நினைவழியா நினைவுகள்"

ஒரு கலைஞன் என்ற வகையில் இல்லாமல் உடன்பிறவாத ஒரு சகோதரர்போல் எனக்கு இசைவழி வலுவூட்டிய மாகலைஞன் அமரர் அ.ஜெயராமன் இல்லையெனும் போது நெஞ்சு கணக்கிறது.

இறைவா. ... இறைவா....இறைவா....

1984ம் ஆண்டு சிறு வயது (12) யாழ். நாச்சிமார் கோவிலடி "இசைவாணர்" மு.கண்ணன் மாஸ்ரர் அவர்களிடம் எனது தகப்பனார் ஹார்மோனிய வாத்தியம் பயில்வதற்கு இணைத்திருந்தார். இந்தக் காலத்தில் அமரராகிய லயஞானபோதன், சதா.வேல்மாறன் மற்றும் அம்பலவாணர் ஜெயராமன் ஆகிய இரு பெருங்கலைஞர்கள் எனக்கு அறிமுகமாகினர். அன்று தொடக்கம் இவர்களுடன் நட்பாகி இவர்களுடைய கலைப் படைப்பை நான் பல மேடைகளில் பார்த்து வியந்த துண்டு.

மேலும் அமரர் அ.ஜெயராமன் எனது பல மேடை நிகழ்வுக்கும், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு இறுவெட்டுக்களுக்கும் தனது வயலின் இசையால் ஒத்துழைப்பு வழங்கியமை என்றும் மறக்க முடியாதது. அதேபோல் இவருடைய வயலின் (சோலோ) தனிக்கச்சேரிகளிலும் நான் ஹார்மோனியம், கீபோட் வாத்தியத்துடன் இணைகின்ற போதெல்லாம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைக்கும் அந்த செய்தியைக் கேட்டு இருவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைவோம்.

அத்துடன் 1992ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்ற (நிகழ்வுகள், போட்டிகள்) நடன, நாட்டிய நாடகங்கள், நாடகங்கள் (இதிகாசம், நவீன), இசைக்குழு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி, மெல்லிசை, சினிமா பாடல்கள் பலவற்றுக்கு இருவரும் இணைந்து இசை வழங்கி பலரது பாராட்டைப் பெற்றது இன்றும் என் கண்முன்னே மறக்க முடியாதுள்ளது.

1974ம் ஆண்டு இளங்கலைஞர் மன்றம் நடாத்திய வயலின் இசைப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற மையை பெருமிதத்துடன் எப்பவும் கூறிக்கொள்வார் அவர் இறந்து சுடுகாடு செல்லும் வரையும் கலைத் திறமையால் பெற்ற தங்க பதக்கத்தினை கழுத்திலே அணிந்திருந்தது எல்லோர் மனதையும் நெகிழவைத்தது.

மேலும் அரச உத்தியோகத்திலும் நூலக சேவையை மிக விருப்புடன் யாழ் மாநகர சபையிலே கடமையாற்றி வந்தார். போர் ஆரம்பித்த காலம் முதல் போர் உக்கிரம் அடைந்த காலத்திலும் வயலின் இசை மூலம் தன்னாலான இசையை அனைத்து கழகங்கள், மன்றங்கள், தொலைக்காட்சிகள், இறுவெட்டுக்கள் அனைத்தி லும் இறுதிவரை தன்னை முழுமையாக இணைத்திருந்த உத்தம கலைஞன்.

பண்பும் இரக்கமும் கொண்ட அமரர் அ.ஜெயராமன் இவர்கள் இன்னும் சில காலம் வாழ்ந்து கலையை சமூகத்திற்கு பயனுள்ளதாக செய்திருக்க முடியும். அதற்கு முன்னர் அவர் எம்மைவிட்டுச் சென்றதுநம் எல்லோர்க்கும் துயரம் தரும் நிகழ்வாகும். இது இவரின் மனைவி பிள்ளைகள் சகோதரங்கள் கலைஞர்களுக்கு பேரிழப்பாகும். அத்துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காமாட்சி அம்பாளை வேண்டுவோமாக.

இசை நண்பன்
"இசைக்கலைமணி" ந. செல்வச்சந்திரன்
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அ.ஜெயராமன் அவர்களின் பல்கோண இசைப் பங்களிப்புகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அ.ஜெயராமன் அவர்கள் அரங்கேற்ற நிகழ்வுகளின்போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி

# நெஞ்சம் ஆறுமோ....

இசை உலகிலேயே "சுருதிவேந்தன்" என அழைக்கப்படும் வித்துவான் எமது வயலின் மேதை அம்பலவாணர் ஜெயராமன் ஐயாவே, கச்சேரிகளில் சரியான நுண்ணிய முறையில் சுருதியை அளவிடும் தன்மை கொண்டவர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது நாட்டியக் கச்சேரிகளுக்கு வயலின் இசையை இசைத்து வந்தவர். ஐயாவின் வாசிப்புத் திறமையை சொல்லிட முடியாது. நாட்டியக் கலைஞர்கள் மாணவர்களிடையே இரச பாவத்தைத் தூண்டுவதற்கு இவரது வயலின் இசையும் முக்கிய பங்களிப்பாகும். தனது இசை மூலம் கதை பேசுபவர். வயலின் வாத்தியக் கருவியில் ஐயாவின் விரல் கதை பேசுவது போல மிகத் தெளிவான நாதமான உணர்வுகளை தட்டியெழுப்பும் தன்மை கொண்டவர். ஐயாவின் வாத்திய இசைப்பணியில் எமது கல்லூரி நிறைந்த வெற்றிவாகை சூடியுள்ளது. பல்வேறுபட்ட தேசிய விருதுகளை மாணவர் பெற்றுள்ளனர். கேட்பவர்களை பிரமிக்க வைக்கின்ற அற்புத இசைப்படைப்பே ஐயாவின் இசையாகும். வவுனியா மண்ணிலே நீண்டகாலமாக தனது வாசிப்பினை நிலைநிறுத்தி மங்காப்புகழ் பெற்றுள்ளார். பெரியவர் முதல் சிறுவர் வரைக்கும் அன்போடு அரவணைத்து உரையாடுவார். இவரைக் கண்டவுடன் மாணவர்கள் புடைசூழ இருந்து மகிழ்ச்சியோடு உரையாடுவர். மாணவர்களை ஊக்கப்படுத்தி செய்யும் திறனை அதிகரிப்பதில் ஐயாவின் பங்கு அதிகம். இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2021ம் ஆண்டு ஐயாவிற்கு பொன்னாடை போர்த்தி "நிருத்திய சுருதிவேந்தன்" என்ற பட்டத்தை எமது கல்லூரி வழங்கியது. ஒரே கலைக் குடும்பமாக எமது கலைஞர் அணி பயணித்து எல்லோருக்கும் கலைத் தந்தையாக இருந்து வழிகாட்டுவார். எமது கலை குடும்பத்தின் தந்தையை இழந்து தவிக்கின்றோம். இவரது பிரிவு எம் உள்ளத்தில் அழியா பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. கலையுலகில் இதனை யாரும் ஈடுசெய்ய முடியாது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நிருத்தியவாணி திருமதி.சூ.வீரசிங்கம்
வ/நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக் கலாமன்றம் - யாழ்ப்பாணம்

## நெஞ்சம் மிக்க நினைவலைகள்....

அண்மையில் நம்மை விட்டுப்பிரிந்த சுருதி வேந்தன் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் இழப்பானது இசை உலகில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இசைக்கருவிகளில் மனித உணர்வுகளுடன் நேரடியாகப் பேசி மனித ஆத்மாவையே அதிரச் செய்யவல்ல இசைக்கருவி வயலின் ஆகும். அது மேலைத் தேய இசைக்கருவியாக இருந்தாலும் இன்று கீழைத்தேய சாஸ்திரிய கலைகளுக்கு அடிப்படையான கருவியாக மாறிவிட்டிருப்பதனை யாவரும் அறிவோம். பல வயலின் இசைக்கலைஞர்களை நாம் கண்டிருந்தாலும் வயலின் இசைக் கருவியூடாக இசையை பிரயோகிப்பதிலும் சபை அறிந்து அளிக்கை செய்வதிலும் எல்லோரும் வெற்றி பெற்றவர்களல்ல. ஆனால் அமரர் ஜெயராமன் அவர்கள் "சுருதி வேந்தன்" என்ற சிறப்பு பெயருக் கமைய வயலின் இசைவாத்தியத்தினை பிரயோகிப்பதில் மிகப் பெரிய ஜாம்பவானாகத் திகழ்ந்தவர்.

கடந்த 60 ஆண்டுகளாக இம்மண்ணிலே இயங்கி வருகின்ற திருமறைக்கலாமன்றம் பல்வகையான நிகழ்வுகளையும், கலைப் படைப்புகளையும் அரங்கேற்றி வருகின்ற நிறுவனம் என்பதனை யாவரும் அறிவார். 1990களுக்குப் பின் இன்று வரை திருமறைக் கலாமன்றத்தின் பல சாஸ்திரிய நிகழ்வுகளுக்கு இசை வழங்கிய வகையில் ஜெயராமன் ஐயா அவர்களின் பங்களிப்பானது மறக்க முடியாதது. இசைக்கச்சேரிகள், நடன ஆற்றுகைகள், நடன நாடகங்கள், நடன அரங்கேற்றங்கள் போன்ற பல நிகழ்வுகளிலும் அவரது பக்கவாத்தியத்துணை தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபகரும், இயக்குநருமான அமரர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் ஒவ்வொரு கலை நிகழ்வுகளின் செம்மையிலும் உருவாக்கங் களிலும் அதிக கவனம் செலுத்துபவர். அவரை இலகுவில் திருப்தி செய்ய முடியாது. ஆனால் ஜெயராமன் அண்ணனின் வயலின் இசையென்றால் அவருக்குப் போதும் ஜெயராமன் வந்தால் சரி எல்லாம் சரியாக இருக்கும் என அவரில் நம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருந்தார். அவர் கொண்டிருந்த மதிப்புக்கமைய ஜெயராமன் அண்ணனும் திருமறைக்கலாமன்ற நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது வழக்கம்.

ஒரு கலைஞன் "நல்ல மனிதனாக" இருப்பது தான் அவனின் மதிப்பை பன்மடங்கு உயர்த்தும். அந்த வகையில் நல்ல மனிதனாக, அமைதியான சுபாவமும் மற்றவரை புறம் கூறாமை யும், பெரியவர், சிறியவர் என்ற ஏற்றத்தாழ்வில்லாமலும், தனக்கண் ஊழியத்திலே மிக இறுக்கமாக இல்லாது, கொடுத்த வாக்கிற்கு பிரமாணிக்கமானவராக, நல்ல மனிதருக்குரிய அனைத் துப் பண்புகளையும் தன்னுள் கொண்டு மிளிர்ந்த ஜெயராமன் அண்ணன் நல்ல கலைஞனுக்கு மேல்வரிச்சட்டம் போன்றவர். அவரது இழப்பு இசை உலகிற்கே பேரிழப்பாகும்.

இவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

யோ.யோண்சன் ராஜ்குமார்
பிரதி இயக்குநர்
திருமறைக்கலாமன்றம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் பணியினை செவ்வனவே செய்து முடித்த கலைஞர்

யாழ்ப்பாணத்துக் கர்நாடக இசையின் வரலாற்றில் அமரர் சுருதிவேந்தன் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் மிக முக்கிய மான இடத்தை தன்னகத்தே வைத்துக் கொண்டவர். இவருடைய இழப்பானது இலங்கையில் கர்நாடக வயலின் இசை வரலாற்றில் நிரப்பப்பட முடியாத மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தி யுள்ளது எனலாம். நான் வயலின் வாசிக்கத் தொடங்கிய காலத்தி லிருந்து எனக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக ஒரு நல்ல நண்பனாக என்னுடைய வளர்ச்சியினை சிறு வயது முதல் கவனித்து என்னை ஊக்கப்படுத்திய அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவர். என்னுடைய குருகுலவாசத்தில் எனக்குக் கிடைத்த முதலாவது அசரீரி. "ஒரு காலத்தில் நான் உன்னைப் பார்த்துப் பெருமை கொள்ளும் அளவிற்கு நீ ஒரு சிறந்த உலகம் போற்றும் கலைஞனாக வருவாய்" என்று கூறியதை இறைவன் கூறிய அசரீரியாகவே கருதுகின்றேன். என் குருநாதர் வீட்டில் அவர் முன்னிலையில் ஜெயராமன்

அண்ணா கூறியது மிகவும் அற்புதமானது. என்னோடு மட்டு மல்லாமல் துறைசார்ந்த அனைத்துக் கலைஞர்களினதும் நன்மதிப் பையும் பெற்றவர். இன்று எனக்கிருக்கிற கவலை அவருடைய நீண்டநாள் விருப்பத்தை நிறைவு செய்யமுடியவில்லை என்பதே யாகும். அதாவது யாழ்ப்பாணத்தில் இருக்கும் அனைத்து வயலின் இசைக் கலைஞர்களும் ஒரே மேடையில் ஒன்றாக இருந்து வாசிக்க வேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆசை. அதை நிறைவேற்றவதற்குள் அவர் எங்களை விட்டுச் சென்றுவிடுவார் என யாருமே நினைக்கவில்லை. அவர் கோபமாக இருந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததில்லை. என்றுமே புன்சரிப்போடு மிகவும் எளிமையாக எல்லோருடனும் பழகுவார். இலங்கையில் ஜெயராமன் அண்ணா வாசிக்காத மேடைகளே இல்லை எனக் கூறலாம். யாழ்ப்பாணத் தின் அனைத்து வாய்ப்பாட்டு இசைக் கலைஞர்களுக்கும், நடனக் கலைஞர்களுக்கும் ஜெயராமன் அண்ணா வாசித்தது போல் யாரும் வாசிக்கவில்லை. இனிமேல் வாசிக்கவும் முடியாது. அந்த அளவிற்கு அனைத்துக் கலைஞர்களோடும் வியாபித்து நின்ற மாபெரும் கலைஞர். மிக முக்கியமாக அனைத்து இசை மன்றங் களிலும் தனது செல்வாக்கைச் செலுத்திய கலைஞர். ஊதியத்தை எதிர்பார்க்காமல் தன்னைத் தேடி வருபவர்களுக்கு என்றுமே மறுப்புத் தெரிவிக்க மாட்டார். தன் பணியினைச் செவ்வனே செய்து முடித்த ஓர் உத்தம கலைஞர்.

அண்ணன் ஜெயராமன் அவர்கள் எங்களை விட்டுச் சென்றாலும் எங்கள் நினைவுகளிலிருந்து என்றுமே விலக மாட்டார். நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

இணுவையூர் சுந்தரமூர்த்தி கோபிதாஸ்
வயலின் கலைஞர்.

*"வாழ்க்கையில் தேவையை குறைத்துக் கொண்டு*
*சமாளித்தால் நீங்கள் புத்திசாலி..*
*தேவையை அதிகரித்துக் கொண்டு*
*அதை சமாளிக்க முடிந்தால் நீங்கள் திறமைசாலி.!"*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயராமன் அண்ணா....


எதை இங்கு நான் சொல்வேன் எப்படித்தான் இயம்பிடுவேன்
கதைகள் பல என் மனதில் கடல் போல உள்ளனவே
சதையும் நகமும் போல் உடன் வாழ்ந்த சரித்திரமே
பதை பதைத்துப் போனேனே பண்பான என் உறவே

அரங்கதனில் இனிதமர்ந்து அமுதமாய் இசை மீட்டும்
வரம் பெற்ற வித்தகரே லய சுருதிப் பெரு வேந்தே
ஒரு முறை மீண்டுமிங்கு வந்திடவே வேண்டுகிறேன்
திரு ஜெய ராமனுனை தரிசிக்க ஆவல் கொண்டேன்

இசை விழா கலை விழா ஆலயத் திருவிழா
திசையெங்கும் நடந்தாலும் நீயின்றி நிகழ்ந்திடுமோ
விசை கொண்டு வீரமொடு வலம் வந்த நாள் முடிந்து
அசையாது போனதுவோ வில்லும் விரலதிர்வும்

எத்தனை அரங்கேற்றம் என்னுடன் அருகமர்ந்து
வித்தைகள் பல பகிர்ந்து வினோதக் கதை நயந்து
சித்தமும் மகிழ்ந்திருந்து சிரித்துக் களித்தோமே
அத்தனையும் அன்றோடு காற்றோடு கலந்ததுவோ

அம்பலவாணரின் பெயர் சொன்ன கலை மகனே
உம் புகழ் அழியாது நிலை பெறும் இவ்வுலகில்
செம்மையொடு கலை வாழ்வை ஈழத்தில் வாழ்ந்தவரே
எம் மன வீட்டினிலே இசை வடிவாய்த் திகழ்ந்திடுவீர்




வசாவிளான் தவமைந்தன்,
யாழ்ப்பாணம்,
05.05.2024.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**அமரர் அ.ஜெயராமன் அவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விருவுரையாளர் மற்றும் மாணவர்களுடன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் அ.ஜெயராமன் அவர்களின் பல்கோண இசைப் பங்களிப்புகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலித்து நிற்கின்றோம்.

இசையால் இவ்வுலகிலே அனைவரையும் அரவணைத்து நின்ற அமரர். அம்பலவாணர் ஜெயராமன் அவர்களை இன்று அஞ்சலித்து நிற்கின்றோம். ஈழத்து இசை மரபிலே காத்திரமான பங்களிப்பினை நல்கிய இசை குடும்பத்தின் வழி வந்தவர். இவருடைய தந்தையார் மிகச் சிறந்த மிருதங்க வித்துவான். ஈழத்து மிருதங்க இசை மரபிலே முக்கியமான இடம் பிடித்தவர். இவருடைய அமைதியும் அடக்கமும், தெளிந்த நீரோடை தான் நடைபயிலும் பூமியெங்கும் வளம் சேர்ப்பது போல, அமைதி யோடு இசைப் பணியாற்றிய பெருந்தகை, அம்பலவாணர் அவர்களுடைய இசைப் புதல்வர்களுள் இவரும் ஒருவர்.

வயலின் வாத்தியம் இசைப்பதிலே பல பாணிகள் (Styles) மரபு ரீதியாகக் கொள்ளப்பட்டு வருவது இசையுலக வழக்கம். அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் எந்த பாணியிலும் ஈடு கொடுத்து சளைக்காமல் வயலின் இசைக்கும் ஆற்றல் நிறைந்தவர். எவரையும் தட்டிக்கொடுத்து, மேடையேற்றி, அழகு பார்க்கும் மானுட மனம் நிறைந்தவர். அதிர்ந்து பேசத் தெரியாதவர். இசைக்கு விலை பேசத் தெரியாதவர். உள்ளத் தூய்மையோடு போதிக்கின்ற ஒரு நல்ல ஆசிரியர். முழு மன தோடு, நிறைவோடு தன்னுடைய பணியை ஆற்றிய ஒரு கலைஞர். அம்பாளிடத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்தவர். ஜெயராமன் அண்ணா! உங்கள் குடும்பமும் எங்கள் குடும்பமும் இசையால் உறவு கொண்டவர்கள். என்னுடைய தாயாருடைய மேடை ஆற்றுகைகளுக்குத் தங்கள் தந்தை யாரும், என்னுடைய, என் சகோதரன் அகிலன் மற்றும் என்னுடைய புதல்விகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்யா, சஹானா ஆகியோருடைய ஆற்றுகைகளுக்கு நீங்களும், என்றும் பலமாக இருந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன். இந்த பந்தம் நாம் செய்த முன்வினையின் பயன் என்றே அம்பாளுக்கு நன்றி சொல்கின்றேன். இசைக்கு அடி நாதமாக இருக்கின்ற சுருதியை உங்கள் மூச்சாக்கி, சுருதிக்கு வேந்தனாக வாழ்ந்து நின்ற உங்களை, இன்று இயற்கையோடு சுருதி கூட்டி மகிழ அம்பாள் அழைத்திருக்கிறாள். சென்று வாருங்கள். இந்தப் பிரபஞ்சம் தங்களுடைய இசையால் நிறையட்டும்.


இசையுலகிலே உங்களுடைய இடத்தினை எவரும் நிவர்த்தி செய்யலாம், ஆனால் அது உங்களுக்கான மாற்றீடாக இருக்குமா என்பது சந்தேகமே. எல்லாம் வல்ல அம்பாளுடைய திருவடிகளில் என்றும் நீங்கள் இசையோடு இன்புற்றிருக்க அன்னையின் பாதக்கமலங்களில் வேண்டிப் பணிகின்றோம். உங்களை இழந்து தவிக்கின்ற குடும்பத்தினருக்கு இந்த துயரத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற மனப்பக்குவத்தை வழங்க அம்பாள் அருள் செய்ய வேண்டும் என்று பணிகின்றோம்.

ஜெயராமன் அண்ணா! சென்று வாருங்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கலாநிதி சுகன்யா அரவிந்தன்
முதுநிலை விரிவுரையாளர்
இசைத்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

*"உன் பார்வையும் சிந்தனையும*
*ஒன்றிணைந்து செயல்பட்டால்*
*உன் வாழ்க்கை பெரிய உயரத்தை அடையும்.!"*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதினிய அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் நினைவுப்பகிர்வு

யாழிசைத்து பரிசுபெற்ற பாணர் நிறைந்த பெருமைமிகு நகரம் யாழ்ப்பாணம். பண்ணிசைத்து பரவுகின்ற கோவில் சூழ்ந்த புறநகர் வண்ணார்பண்ணை. அங்கிருக்கும் எழில்மிகு வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயம். நாச்சிமார் கோவில் என்றே உருவான பதியருகில் பணிசெய்ய விளைந்தார் அம்பலவாணர் என்றபெரும் மிருதங்க இசைமேதை. அம்மன் பெயர் தாங்கிய காமாட்சியம்மா துணையாய் அமைய இரகுநாதன், ஜெயராமன், ஸ்ரீனிவாசன், இராமச்சந்திரன் என ஆண்களுக்கும் சந்தானலக்ஷ்மி, சரஸ்வதி என பெண்களுக்கும் பெயர் சூட்டி பிள்ளைகள் அறுவரையும் நிறைவாக ஈன்றெடுத்து வளர்த்தனர்.

அங்கவரை இசைத்துறையில் ஈடுபடுத்தி பயிற்றுவித்த தந்தையும் பாசமிகு தாயும் மிருதங்க இசையுடன் வாய்ப்பாட்டு வயலினிசை வல்லுனராய் கலைத்தொண்டு ஆற்றிடும் கலைக் குடும்பமாய் பிள்ளைகளை வளர்த்தனர். அவ்வகையில் நாச்சிமார் கோவில் அருகமர்ந்தே வளர்ந்த பேறுடை புண்ணியவானே எமதினிய ஜெயராமன் எனும் பண்புநிறை கலைஞன். அன்புடனே காதலித்து மைத்துனியாம் கமலேஸ்வரியை கைப்பிடித்து இல்லற வாழ்க்கையில் இணைந்தார். சாரங்கன், சைந்தவி, சாருகேஷி என்று தன் மூன்று பிள்ளைகளுக்கும் இசையுடன் தொடர்பான பெயர்களையே சூட்டி தன் இசைக்கலை ஆர்வத்தை பிள்ளை களுக்கும் ஊட்டியே வளர்த்தார். மூன்று தசாப்தகால நூலக சேவையில் பணிபுரிந்தமை அவரது அறிவுத்தேடலுக்கு வாய்ப் பாகியது. வாசிப்பின் மூலம் பல்துறை அறிவும் கைவரப்பெற்ற திறன் ஆர்வமிகு ஆய்வாளருக்கு உதவிட அனுகூலமாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிய கலாகேந்திரா தயாரித்தளித்த நாட்டிய நாடகங்கள் நடன நிகழ்வுகள் பலவற்றிற்கும் வயலினிசை மெருகூட்ட பக்கத்துணையாய் அமர்ந்து அணிசெய்வார் ஜெயராமன். ஒத்திகை பார்க்க ஜெயராமன் ஐயா வரும்வரை ஆவலோடு அமர்ந்திருப்பர் அனைவரும். வந்ததுமே அவர் உதிர்க்கும் பண்புநிறை நகைச்சுவை வார்த்தைகள் அங்கிருக்கும் அனைவர்க்கும் ஔடதமாய் அமையும். உற்சாகம் மேலோங்க அனைவரும் ஓர் குழுவாய் புத்தெழுச்சி கொண்டே மகிழ்வுடன் ஒத்திகையில் பங்கேற்பர். அவ்வகையில் ஜெயராமன் அவர்களின் பங்களிப்பும் நாட்டிய கலாகேந்திராவின் கலைக் குழுவினருடனான இணைவும், நாட்டிய ஆக்கங்களுக்கு உறுதுணையாய் அமைந்த மையும் அன்னை காமாட்சியின் அருட்செயலே.

ஈழத்து வயலினிசை வல்லோன் "சுருதி வேந்தன்" எனும் பெருமை பெற்றோன் நாட்டிய இசை அரங்கமெங்கும் அணிசெய்தோன் காலனவன் அழைக்கும்வரை வயலினிசை மீட்டோன் ஜெயராமன் எனும் எங்கள் பண்புநிறை கலைஞன் இன்று எம்மிடையில் இல்லை. அன்னவரின் குலதெய்வம் நாச்சிமார் கோவிலுறை காமாட்சி அம்பாள் வயலினிசை வித்தகரை தன் திருவடியில் சாந்திபெற அழைத்துக் கொண்டாள் போலும். அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்திக்கும்....

நாட்டிய கலாகேந்திரா கலைஞர் குழாம்
முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா
ஸ்தாபக இயக்குனர்
நாட்டிய கலாகேந்திரா
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவலைகள்...

**அமரர் கலாபூஷணம் அம்பலவாணர் ஜெயராமன்**

ஜெயராமன் அவர்கள் சிறு வயது முதல் அன்னை காமாட்சி அம்பிகையின் மீது தீராத பக்தி கொண்டவர். ஆலயத்தின் முன்னேற்றகரமான செயற்பாடுகளில் முன் நின்று உழைத்தவர்.

மஞ்சத் திருவிழாவில் திருமஞ்சத்திற்கு வயலின் மீட்டும் கையினால் முட்டி போட்டு அம்பாள் சீராக வீதி உலாவருவதை நெறிப்படுத்திய ஒரு வல்லமை படைத்தவராக தனது இளம் பருவத்தை வளர்த்துக் கொண்டவர்.

வயலின் மேதை சர்வேஸ்வரசர்மா அவர்களிடம் வயலின் இசையைக் கற்று வந்தார். குருவிடம் மிகுந்த பக்தியுடன் செயற்பட்டு வந்தார். அதனால் வயலின் இசையை திறம்பட கற்கக் கூடியதாக இருந்தது.

கர்நாடக இசைக்கு மட்டுமல்லாது மெல்லிசை, நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் வயலின் இசைமூலம் மெருகூட்டும் ஆற்றல் மிகு பன்முகத்தன்மை கொண்டவராக விளங்கினார். ஒரு காலத்தில் சங்கீத பூஷணம் வால் நடராசா அவர்கள் வாத்தியங்களுக்கு சுருதி சேர்ப்பதில் வல்லவராக இருந்தார். அவருக்கு பின்னர் திரு.ஜெயராமன் அவர்கள் இருந்தார்கள். இதனால் அவருக்கு "சுருதிவேந்தன்" என பட்டம் சூட்டப்பட்டது.

இவர் வாழ்ந்த காலத்திலேயே "கலாபூஷணம்" என்ற விருது கிடைக்கப்பட்டமை பெரும் பேறாகும். ஆலய மகோற்சவ காலத்தில் தம்பபூசையின் போது மிருதங்க இசை வழங்கு வதற்குரிய ஏற்பாட்டினை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜெயராமன் அவர்கள். 2006ம் ஆண்டு காமாட்சி அம்மனின் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து சுற்றுப்புற சுவர்களை அழகுற அமைத்து, வசந்தமண்டப முன் வாசலையும், தெற்குப்புற வாசலையும் சிறு கோபுரங்களையும் அமைத்து, அதே ஆண்டு அவருடைய தலைமையில் கும்பாபிஷேகம் இனிதே நடாத்தி முடிக்கப்பட்டது.

இசைத்துறையில் மட்டுமல்ல, பொதுச்சேவை, ஆலய சேவை என்பவற்றிலும் எல்லோராலும் போற்றிப் புகழும்படியான பெருமகன் எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்தது எமக்கு மட்டுமல்ல சங்கீத உலகுக்கும் ஒரு பேரிழப்பாகும். இவர் நாமம் என்றும் வாழ காமாட்சியை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

தர்மகர்த்தா சபை
யாழ்.வண்ணை ஸ்ரீ காமாட்சிஅம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார்கோவில்)

***"அன்போடு இருங்கள் பிறரை பாராட்டுங்கள்..***
***இருப்பதை நினைத்து மனமகிழ்வோடு வாழுங்கள்..***
***வாழ்க்கை மிக குறுகியகாலம்***
***மனது வைத்தால் நிறைவோடு வாழலாம்.!"***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் முன்னணி கலைஞர்களோடு அமரர் அ.ஜெயராமன் அவர்களும்
யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுடன் இணைந்து வழங்கிய இன்னிசை அருவி - 2000











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வண்ணை காமாட்சி அம்மன் ஆலய ஆன்மீக செயற்பாட்டில் அமரர் அ.ஜெயராமன் அவர்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இணையற்ற கலைஞர்

கலை உலகில் பல கலைஞர்கள் வருகின்றார்கள் மறைகின்றார்கள் ஆனால் வரலாற்றில் நின்று நிலைக்கும் கலைஞர்கள் சிலரே. அவ்வாறு நின்று நிலைப்பதற்கு கலைத் திறமை மட்டுமல்லாது சமூகத்துடன் கொண்டுள்ள உறவும் பற்றும் காரணம் எனக் கூறமுடியும். ஒரு கலைஞர் எவ்வாறு கலையோடும் சமூகத்தோடும் உறவைப் பேணி வரலாற்றில் வாழ வேண்டும் என்பதற்கு வரைவிலக்கணமாக வாழ்ந்து வருகின்ற ஆத்மார்த்த கலைஞர்களில் வயலின் வித்துவான் "சுருதிவேந்தன்" அம்பலவாணர் ஜெயராமன் முதன்மையானவர் என்பது அனைவரும் அறிந்த விடயம். இவர் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர் என்பதுடன் சிறியவர் முதல் அனுபவமுள்ள கலைஞர்கள் அனைவருக்கும் அவரவருக்கு ஏற்ற வகையில் அணிசேர் கலைஞராக நிகழ்வுகளை சிறப்பிக்கும் ஆற்றல் கொண்டவர். அந்த வகையில் கிழவன்காடு கலாமன்றம் அவரது சேவையினை அதிகளவில் பெற்றுக்கொண்ட ஒரு அமைப்பு என்பதனை நன்றியோடு குறிப்பிட விரும்புகின்றேன். வளரும் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளிடம் கொடுப்பனவினை எதிர்பார்க்காமல் அல்லது வழங்கப்படும் குறைந்தளவிலான கொடுப்பனவினை பெற்றுக் கலையை மூச்சாக மதித்து வாழ்ந்ததால் இறுதி வரை கலைக்காக வாழ்ந்த கலைஞர் என்ற நிலையினைப் பெறும் சமூகத்திற்கு தேவையான கலைஞர்கள் வரிசையில் இவரின் இழப்பு அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதோடு கலை வரலாற்றில் இவரது பணி என்றும் போற்றப்படும் என்ற நம்பிக்கையுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகளில் இளைப்பாற எமது கலாமன்றத்தின் சார்பில் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.ந.சோதிநாதன்
ஸ்தாபகரும் தலைவரும்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுருதி லய சாம்ராஜியத்தின் பரிதியாகப் பிரகாசித்த கரவொலிபவன்"

அரைநூற்றாண்டு காலம், இசையால் வடபுலத்தை ஆண்ட சுருதிலய வேந்தனாக, வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் திகழ்ந்துள்ளார். இலங்கை இந்தியக் கலைஞர்களால் மிகவும் விரும்பப்பட்ட சிறந்த பக்க வாத்தியக் கலைஞர் ஆவார். சுமார் ஆயிரம் இசைக்கச்சேரிகளுக்குச் சொந்தம் கொண்டாடிய இசைப்பிரம்மன் இவர்.

யாழ்ப்பாணத்தில் அரங்கேறிய வாய்ப்பாட்டு, மிருதங்க, நடன அரங்கேற்றங்களை தனது வாசிப்புத்திறமையால் வசீகரித்த வயலின் பேராசான் இவராவார். இசையுலகிலே, இவரது தந்தையார், மிருதங்கப் பேராசான், அமரர் அம்பலவாணர் அவர்கள் எப்படி கொடிகட்டி யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தாரோ அதேபோல, அவரது மகனான அமரர் ஜெயராமனும் வயலின் வாத்திய வாசிப்பில், வானுயர உச்சம் தொட்டார்.

கல்பிதம், மனோதர்மம் இரண்டிலும் அடேயப்பா நனி சொட்டிய வள்ளலாக மிளிர்ந்தார். இராகம், தாளம், பல்லவி இவரது சொத்தாகும். அமரர்களான சங்கீத சாகித்திய சுருதி லய கர விரலோன்களான இராதாகிருஷ்ணன், குமாரசாமி, பிச்சையப்பா, சண்முகானந்தம், சர்வவேஸ்வர சர்மா, வெங்கடேஸ்வர சர்மா, கேசவ மூர்த்தி ஆகியோரின் ஆசீர்வாதத்தையும், வசீகர வாசிப்பையும் பேறாகக் கொண்டவர். தாழாத கீர்த்தியுடன் மாறாத வார்த்தையும் நிரம்பப் பெற்றமையால் இசையாளர்களை தம்வசமாக்கிக் கச்சேரி தர்மத்தினைப் பேணி சமூக மட்டத்தில் ஒரு ஜாம்பவானாகத் திகழ்ந்தார்.

இசைவிழாக்கள், தியாகராஜ உற்சவ வைபவங்கள், ஆலய திருவிழாக்கள், கம்பன்விழாக்கள், பண்ணிசை நிகழ்வுகள், பல்கலைக் கழக சங்கீத நிகழ்வுகள், நாட்டிய நாடக நிகழ்வுகள் யாவற்றிலும் வயலின் வாத்தியம் இவரை வாரியணைத்து வள்ளலாக்கிற்று. இசை உலகில் இவரது நாமம் மந்திரமாக ஒலிக்கும்.

கலாபூஷணம்
கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலகநர்த்தனாலயம் அஞ்சலி...

வாழ்க்கைப் பயணத்தில் பல மனிதர்களை நாம் சந்தித்திருக்கின்றோம். சிலர் "இப்படியும் மனிதர்களா" என சிந்திக்க வைக்கிறார்கள் சிலர். "இவர்களல்லவா மனிதர்கள்" என சிந்தனையில் தங்கிவிடுகின்றார்கள். அந்த வகையில் என் கலைப்பயணத்தில் நான் வியந்து பார்த்த மனிதராகவும், அனுபவத்தில் பண்பட்டவராகவும் எனது அகத்தினுள் பத்திரப் படுத்த வேண்டியவராக விளங்கியவருள் அமரர் ஜெயராமன் அவர்களும் ஒருவராவார்.

அமைதியான உருவம் அதிர்வில்லாத பேச்சு, ஆழமான இசை ஞானம் இது ஜெயராமன் அவர்களின் மொத்த வடிவம். தான் சார்ந்த எல்லோருக்கும் அவர் கலைஞனாக மட்டுமல்ல மனிதநேயமிக்க ஒரு மனிதனாகவே வாழ்ந்தார். இருபத்தைந்து வருடங்களிற்கு மேலாக திலகநர்த்தனாலயத்தின் வருடாந்த

விழாக்கள், கலாவித்த கருக்கான அவைக்காற்றுகை நடனத் தேர்வு, அரங்கேற்றங்கள் என அமரர் அவர்களின் வயலினிசை அலங் கரிக்காத அரங்கங்களே இல்லை எனலாம்.

திலகநர்த்தனாலயத்தின் 50வது நிறைவு விழா பொற் திலகமாக அரங்கினில் பரிணமிக்கும் போது மாணவர்கள், அணிசெய் கலைஞர்களாக புதிய தலைமுறையினரையே விரும்பியபோதும் இது வரை காலமும் என்னோடு பயணித்த என் அருமை கலைஞர்களுடனேயே அரங்க ஆற்றுகைக்காக மேடையேற விரும்பினேன். அதன் படியே பொற்திலக நிகழ்வுகள் சிறப்புடனேயே நிறைவுற்றது. ஆனால் இசையுலகின் ஜம்ப வானாக சுருதி வேந்தனாக வலம் வந்த பெருமை மிகு "விற்திலகத்தை" இழந்து நிற்போமென அப்போது தெரிவித் திருக்கவில்லை. அன்றைய நிகழ்வு சிறக்க அரங்கில் அமைதியாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இசை வாத்தியத்தை வாசித்துக்கொண்டிருந்த பெருமகனின் காணொளி சிலவற்றை கண்ணுற்ற போது, இறுதி நேரத்தில் கூட தன் வேதனையை தாங்கிக்கொண்டு இயல்பாக இருக்கிறாரே! எப்படி முடிந்தது இவரால்? தன்னால் பொற்திலக நிகழ்வுக்கு பங்கம் வந்துவிடக்கூடாதென அமைதியாக உறுதியாக அவர் வாசித்த திலகநர்த்தனாலயத்தின் 50வது நிறைவு விழா அமரரை இறுதி விழாவாக அமையுமென கலையுலகம் எண்ணியிருக்கவில்லை. திலக நர்த்தனாலயத்தின் கலைப் பயணத்தில் அவர் இனி இல்லாவிடிலும் அந்த உன்னத கலைஞரின் உயிர்ப்பான இசையும், உயரிய பண்பும், உன்னதமான மனித நேயமும் தொடர்ந்தும் எம்மோடு பயணிக்கும் என்பதில் ஐயமில்லை.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*


கலாபூஷணம்
யசோதரா விவேகானந்தன்
அதிபர்
திலகநர்த்தனாலயம்

***"ஒருநாள் விடியும் என்று காத்திருக்காமல்
இன்றே முடியும் என்று முயற்சி செய்..
வேதனைகள் வெற்றிகளாகும்..
சோதனைகள் சாதனைகளாகும்.!"***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



This is to certify that

Mr. Ambalavanar. Jeyaraman

Participated at the

Workshop on

Capacity Building of Public Librarians and Library Sevaka
Working in Local Authorities, Jaffna District

Jointly organized by

The Municipal Council, Jaffna

and

The Foundation for Library Awareness, Jaffna

Sponsored by

GTZ

from

03-07 September 2008

Municipal Commissioner
Jaffna

President
FOLA



# Certificate of Participation

The Consulate General of India in Jaffna

and

Brinda Gana Laya Foundation

Jointly organized a Cultural Event

"Shruthy Laya Gaanam"

on

09 March, 2014

This Certificate is awarded to

Mr./Mrs./Miss Ampalavaanar Jeyaraman for

Successfully participating in the cultural event

(Mrs. K. Vijayaragavan)
J.P. (Whole Island)
President, BGL Foundation

(Suresh K. Menon)
Consul / Head of Chancery
Consulate General of India in Jaffna



# வற்றாப்பளைக் கண்ணகியம்மன் ஆலய பரிபாலனசபை

## பாராட்டுச் சான்றிதழ்



யாழ்ப்பாணம் வண்ணை – குளங்கரை மருதடி

## ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்

(நாச்சிமார் கோவில்)

திரு. அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள்

வயலின் இசைத்துறையில் பணியாற்றிய கலைச் சேவைக்காக

"ஸ்ருதி வேந்தன்"

என்னும் பட்டத்தை வழங்கி ஆலய தர்மகர்த்தா சபையினால்

கௌரவிக்கப்படுகின்றது.

தலைவர் 18.04.2011 திகதி செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - வண்ணை
# பிரபல வயலின் வித்துவான்
# அமரர் திரு. அம்பலவாணர் ஜெயராமன்
# (1959 .08 .29 - 2024.04.08)
# அவர்களுக்கான கவிதாஞ்சலி

ராமா ராமா ஜெயராமா
ராமா ராமா ஜெயராமா

பல்லவி

பாத கமலங்கள் பணிந்திடுவோம் – ராமன்
நாத வழிவினைப் போற்றிடுவோம்

அனுபல்லவி

அம்பல வாணரின் அருந்தவப் புதல்வனே
காமாட்சித் தாயின் கலைவழிவானவனே

சரணம் – 1

ஸ்ருதி லய வேந்தனாய் புகழடைந்தாய்
சாரங்கன் வழிவினில் நீயிருந்தாய்
சைந்தவி சாருகேசி இராக வழிவினில்
நைந்துருகி பிள்ளைகளை ஆராதித்தாய்

சரணம் – 2

இராக சொரூபங்கள் அத்தனையும் – உந்தன்
விரலசைவினில் பரிமளிக்கும்
அரங்குகள் பல கண்ட விழாக்களிலே
பிரமாதமாய் உந்தன் இசை ஒலிக்கும்

சரணம் – 3

நாத வழிவங்களை ஆராதித்திட சிவ
பூதகணங்கள் உனை அழைத்தனரோ – ராமா
வேத மந்திர மொலிக்க நாத வெள்ளத்தில் திளைக்க
ஆதி சிவன் ஆடலினை சேவித்தனையோ

ராமா ராமா ஜெயராமா
ராமா ராமா ஜெயராமா

கலாபூஷணம்
எஸ்.சிவானந்தராஜா
09.04.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைச் சகோதரி அண்ணாவியார் குடும்பத்தவர்களின் இரங்கல்...

அமரர் திரு.அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் முள்ளிய வளையைச் சேர்ந்த அமரர் சூரி பொன்னையா (அண்ணாவியார்) முல்லைச் சகோதரிகள் குடும்பத்துடனான நெருங்கிய இசை குடும்ப உறவு பற்றிய நினைவுப் பதிவுகள்.

இலங்கையில் பெயர் பெற்ற பிரபல்யமான வயலின் வித்து வான்களில் அமரர் அம்பலவாணர் ஜெயராமனும் ஒருவராவார். இவரின் குடும்பமே இசைக்குடும்பம். இவருடைய தந்தையார் மிருதங்க இசை மேதை அமரர் வேலுப்பிள்ளை அம்பலவாணர் அவர்களிடம் எமது சகோதரர் கலாபூஷணம் திரு. பொன்னையா பாலசுப்பிரமணியம் அவர்கள் **1964** முதல் மிருதங்க வாத்திய இசையை முழுமையாக கற்று பல மேடை கச்சேரிகளுக்கு இன்னும் மிருதங்கம் வாசித்து வருகிறார். அமரர் திரு. அ.ஜெயராமன் அவர்களும் எமது சகோதரி திருமதி இந்திராணி சண்முகலிங்கம் (ஓய்வு நிலை உ.க.ப.சங்கீதம்) அவர்களும் அமரர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சர்மா அவர்களிடம் ஒரே குருவிடம் ஒன்றாக வயலின் இசையை முழுமையாக கற்று விற்பன்ன ரானார்கள். இருவரும் இணைந்து வயலின் சோலோ இசை நிகழ்வை பல மேடைகளில் நிகழ்த்தி வந்தார்கள். எமது இசைக் கச்சேரிகளுக்கு வயலின் இசையை பக்கவாத்தியமாக தொடர்ந்து வாசித்து வந்தார். இடப்பெயர்வு காரணமாக மீளக்குடியமர்ந்த வேளையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு நான் (முல்லைச் சகோதரி திருமதி புவனா இரத்தினசிங்கம்) பாடிய பக்தி இசை பாடும் இறுவெட்டு மூன்றிற்கும் வயலின் இசை வழங்கி னார். மேலும் பல ஆலய பக்தி இசை இறுவெட்டுக்களுக்கும் வயலின் இசை வழங்கிய பெருமை இவரையே சாரும். இவரின் வயலின் இசையால் எமது பாடல்களுக்கு மென்மேலும் மெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியது. 10 வருடங்களாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிறைவு பங்குனித் திங்கள் திருமஞ்ச பவனியன்று எமது இசைக்கச்சேரிக்கும், பல இசை நிகழ்வுகளுக்கும் வயலின் இசை தொடர்ந்து வழங்கி வந்தார். அவரது மகன் சாரங்கன் அவர்களையும் மோர்சிங் வாசிப்பதற்கு அழைத்து வருவார். 2013 தொடக்கம் முள்ளியவளை சாயி ஆச்சிரமத்தில் நடைபெறும் ஒவ்வொரு ஆண்டு விழாவின் போதும் எமது இசை நிகழ்விற்கும் தவறாது வந்து வயலின் இசை வழங்குவார். முள்ளியவளை கல்யாண வேலவர் தேர்த் திருவிழாவின் போதும் எனது மாணவர் சி.யதுர்சன் இசை நிகழ்ச்சிக்கும் வயலின் இசை வழங்கினார். இவரது வயலின் இசை தனித்துவமானது எல்லோரையும் கவரக் கூடியதாகவும் இருக்கும். சுருதி, தாளம் வழுகாமல் சுத்தமான வாசிப்பாக இருக்கும். இதனாலேயே இவருக்கு "சுருதி வேந்தன்" என்ற பட்டமும் கிடைக்கப்பெற்றது. பல பட்டங் களைப் பெற்றிருந்தாலும் "சுருதி வேந்தன் ஜெயராமன் என்ற பெயர் தான் அவருக்கு விருப்பமானதும். கலைஞர்களின் செவி களிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும். இன்னும் அவரது வயலின் இசையை மறக்கமுடியாது. எல்லோரது மனதிலும் செவிகளிலும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. எல்லோருடனும் அன்பாக பழகுவார். சாந்தமான குணம் கொண்டவர்" வயலின் இசையை தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த ஒரு கலைஞன். இறுதி மூச்சுவரையும் வயலின் இசையை வாசித்து சாதனை படைத்த வாழ்நாட் சாதனையாளர். எல்லாம் வல்ல இறைத் திருவருளின் பாதங்களில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமைகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அண்ணாவியார் சூரி பொன்னையா
குடும்பம், பிள்ளைகள்,
முல்லைச் சகோதரி திருமதி புவனா இரத்தினசிங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை வழி கிட்டிய இனிய அண்ணன்

வயலின் வித்துவான் அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் எனது பேரன்புக்குரிய குரு பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வர சர்மா அவர்களின் முதன்மையான சிஷ்யர்களில் ஒருவர். இசை வழி எனக்கு கிட்டிய ஓர் இனிய அண்ணன்.


யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு எதிராக அமைந்திருக்கும் ஒழுங்கையில் எனது குரு வசித்து வந்த காலம் அது. அவரிடம் இசை கற்றுக்கொள்ள ஆரம்பித்து சிறிது காலப்பகுதியில் வாத்தி யாரின் இல்லத்தில் பிரதி மாதம் தோறும் நடாத்தப்பட்டு வந்த இசை நிகழ்ச்சியில் முதன் முதலாக ஜெயராமன் அண்ணா வின் அந்த கச்சிதமான வயலின் இசையை கேட்கப் பெற்றேன். மின்னல் வேகத்தில் அவர் வாசிக்கும் சோபில்லு சப்தஸ்வர, சரசர சமரைக்க, நின்னு வினா நாமதி ஆகிய தியாகராஜ கீர்த்தனைகளும் மிக இலாவகத்துடன் வாசிக்கும் தீராத விளையாட்டுப் பிள்ளை போன்ற பாடல்களும் என் உள்ளத்தைக் கட்டிப் போட்டன. ஜெயராமன் அண்ணாவின் மிக நுட்பமாக சுருதியுடன் சங்கமித்து இருக்கும் அந்த இரம்மியமான இசை வயலின் இசை மீது எனக்கு ஓர் அதீதமான நாட்டத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையாகாது.

எனது குருவின் பேரன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஒரு சீடனாக ஜெயராமன் அண்ணா திகழ்ந்தார். குரு சேவையை சிரமேற்கொண்டு நமது குருவுக்கு மிக அவசியமான காலத்தில் ஆதரவும் கவனிப்பும் தனது குடும்பத்தினருடன் ஒத்துழைப்புடன் வழங்கி இருந்தார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினர், சக கலைஞர்கள் மற்றும் உலகமெங்கும் பரந்து வாழும் அவரது இசை ரசிகர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை இத்தால் பகிர்ந்து கொள்கிறேன். ஆண்டவன் சந்நிதானத்தில் எமது குருவுடன் சேர்ந்து இசைமீட்டி திளைத் திருக்கிறார் என்று எண்ணி தேற்றிக்கொள்கிறேன். அவரது ஆத்மா பூரண சாந்தியடைய எனது உளமார்ந்த பிரார்த்தனைகளை சமர்ப்பிக்கிறேன்.

இவ்வண்ணம்,
அன்புத் தங்கை
காஞ்சனா செந்தூரன்
மெல்போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Alumni, Faculty of Medicine
University of Jaffna

**Certificate of Appreciation**

*This certificate is presented to*

AMPALAVANAR JEYARAMAN

*in appreciation for the dedicated performance in the Dance Drama Alapparumkarunai, produced by Kokuvil Kalabhavanam, in order to facilitate the fund raising effort of the Alumni.*

President    Secretary



சற்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 168 ஆவது இசை ஆராதனை - 2015

**சான்றிதழ்**

இப் பாராட்டுப்பத்திரமானது

திரு / திருமதி / செல்வன் / செல்வி ... அவர்களுக்கு

யாழ் இந்திய துணைத்தூதரகமும் வட இலங்கைச் சங்கீத சபையும் இணைந்து நடாத்திய சற்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 168 ஆவது இசை ஆராதனை நிகழ்வில் இசை அர்ப்பணிப்புச் செய்தமையினைப் பாராட்டி 21-02-2015 சனிக்கிழமை அன்று வட இலங்கைச் சங்கீத சபை தற்பரானந்தன் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

திரு.S.உ. தயகுமார்
வட இலங்கைச் சங்கீத சபைத்தலைவரும்
யாழ் வலயக்கல்விப்பணிப்பாளரும்

கௌரவ.K.S.மர்வா
யாழ் இந்திய துணைத்தூதரக அதிகாரி
கல்வி கலை கலாசாரப் பிரிவு



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

செல்வன் / செல்வி ... அவர்களுக்கு

2011.01.15 அன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற

தைப்பொங்கல் விழாவின் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றியமைக்காக

இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.



இளங்கலைஞர் மன்றம் - நல்லூர்

நல்லூர் முருகன் உற்சவகால

தெய்வீக இசையரங்கு 202...

யாழ்ப்பாணம், இலங்கை.

எமது மன்றம் நல்லூர், தூர்க்கா மணி மண்டபத்தில் நடத்திய தெய்வீக இசை நிகழ்வில் ...

திரு./திருமதி./செல்வன்/செல்வி ...

அவர்களைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.

தலைவர்

செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவு

## சுருதிவேந்தன் அம்பலவாணர் ஜெயராமன்.

## அஞ்சலி.............

# இசை நாதம் ஓய்ந்தது

இசை வழி வந்தவரே

இசைக்காய் வாழ்ந்தவரே

வயலின் சுருதிவேந்தரே, நாத கலா வினோதனே

எம்மையெல்லாம்

பரிதவிக்க விட்டு

எங்கு சென்றீர்.

வேலிமச்சாள் என்று

எமது அன்னையை

அன்புரிமைடன் அழைப்பவரே,

எங்கள் இல்லம் வந்து

என்னையும் என் சகோதரர்களையும் வாரி அணைத்து அன்பு காட்டியவர்

எங்களுக்கு ஆசானாய்

இருந்து இசைக்கு வித்திட்டவரே

இசைத்துறையில்

நாங்கள் மிளிர

ஏணியாய் இருந்து

ஏற்றி விட்டு அழகு பார்த்தவரே,பல நூற்றுக்கும்

மேற்பட்ட உங்களின் வயலின்

சோலோ நிகழ்சிகளில் உங்களோடு தாளவாத்தியங்கள் இசைக்கவும்,

எம்மோடு சிறுவனான தம்பி ராசனை 5,6,வயதில்

அவரது ஆர்வம் கண்டு அழைத்து

வயலின் இசை கச்சேரி சோலோ இசையுடன்

எம் தாளவாத்தியங்களையும் இசைக்க ஊக்கத்தோடு வழி காட்டியவரே,,

இணைந்து பல பாடல்களுக்குஇசைக்கோர்வைகள் தந்தும் ,

சாதனை புரிந்தவரே

இசை சர்க்கர வர்த்தியே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 வருடத்தின் பின்னராக 2023ல்
மீண்டும் அம்பாள் திருவிழாவில் உங்களோடு
தெய்வீக இசை அரங்கில்
வயலின் சோலோ நிகழ்வில் கலந்து கொள்ள
அம்பாளின் கிருபையாக  கிடைத்த சந்தர்ப்பம்
என்றும் மறக்க முடியாததாக உள்ளன.
இன்று ஆறாத துயரில்
எங்களை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டது
ஏனோ???
இதுதான் விதியோ
இறைவனை உமது இசையால் மகிழ்விக்க
காலன் வந்து உங்களை
கவர்ந்து சென்றானோ
வயலின் தந்தி களும்
உங்கள் கை படாமல் ஏங்கி நிற்க்க..
உமது அன்பான பாசமுள்ள மனைவி பிள்ளைகள் பரிதவிக்க,
உற்றார் உறவுகள் நண்பர்களோடு நாங்கள்
கண்ணீருடன்
வாடி நிற்கிறோம்,!!!
எங்களை விட்டு நீங்கள் பிரிந்தாலும்
உமது இசை எம்முள்
உந்து சக்தியாக
இயங்கிக்கொண்டே
இருக்கும்,
இதயங்களை வருடிக் கொண்டே இருக்கும், அம்பாளின்
திருப் பாதத்தில்
உமது இசை மழை பொழிந்து கொண்டே
இருக்கட்டும்.

*உங்கள் புகழ் நாமம் என்றும் வாழும்.*
*"ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி."*
*உங்களின் நினைவோடு...*

பண்ணிசை
ஓதுவார் மூர்த்தி சண்முகலிங்கம் விமலேஸ்வரி
(வேவி மச்சாள்) பிள்ளைகள் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயராம் வயலின் இசைக்கோர் மிருதங்க ஞானவாரிதி துரைராசாவின் இரங்கல்...

அம்பலவாணர் ஜெயராமன் என்ற நாமத்துடன் வயலின் வாத்திய இசையால் உலகை வலம்வந்த அந்த நாள் முதல் உம் மூச்சு ஓய்வுகொள்ளும் வரையில், நாற்பது வருடங்களுக்கு மேலாய் எம்முடன் உடன்பிறப்புக்கள் போல் உறவாடி. மேடை இசை நிகழ்வுகளில் இசை மீட்டிய உன்னிசைப் பிரசிப்பை யான் எண்ணிப் பார்க்கையில், உன் பிரிவுதனில் என் மனக்கண் முன் நிற்கின்றாய் ராமனே!

ஜெயம் என்ற பெயர் கொண்டாய்
தரணியெங்கும் வயலின் வாத்திய இசைவழி வெற்றி கொண்டாய்
இசையுலகை இதயத்தோடு இதயமாய் வாசமாக்கினாய்
இசை சுரங்களை இசையரங்கு, இசைநிகழ்வு, இசை ஆராதனை,
நாட்டிய அரங்கேற்றம், மிருதங்க அரங்கேற்றம், வீணை,
புல்லாங்குழல் அரங்கேற்றம் என்றெல்லாம் பர்ணமித்த
உனது இசையின் இரசனையை மிடுக்கையான்
எண்ணிப் பார்க்கையில்
உன் பிரிவுதனில் என் மனக்கண் நிற்கின்றாய் ஜெயராமனே!
நல்லூர்க்கந்தன் இசை அர்ச்சனை நிகழ்வுகள்,
வசந்த மண்டப இசையரங்கம் உம் வயலின் வாத்திய
இசையிலும், இரசனையிலும் எனது மிருதங்க நாதத்திலும்
நல்லூர்க்கந்தன் சொக்கி நிற்கின்ற
பொழுதினை மீட்டுப் பார்க்கையில்
நல்லூரான் நாமத்தை மறந்து விட்டேனோ!
என்று பிரம்மையில் நானின்று ஜெயராமா, ஜெயராமா!
என அழைத்திடுகிறேன் ஜெயராமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையுலகிற்கு விடை கொடுக்கும்
இறுதி நாள் அன்று என்னுடன் இறுதி மூச்சுவரை
இசை அர்ப்பணம் செய்து அன்றைய நாள்
இசைக்காய் உம் வாழ்வுதனை அர்ப்பணித்து
பொறுப்புள்ள கலைஞனாய் நேர்மையுள்ள கடமையாளனாய்
கலைஞர்களுக்குள் சிகரமாய் நின்று
மூச்சுள்ளவரை விழா நிகழ்வினை நிறைகுடமாக்கி
சென்றனையே...
இந் நிகழ்வு உமது இசை அர்ப்பணிப்பின்
இறுதி நாள் என யாரறிவார்
நிகழ்வின் அன்றிரவே கேள்வியுறாத செய்தி தனைக் கேட்டு
மாயைச்சிலையாகி நின்றனையோ!
அன்றிரவே பரம இசையுடன் ஐக்கியமான
உம் பிரிவு தன்னை எண்ணி! எண்ணி!

அன்னார் வயலின் இசைக் கலைஞர்களுக்கும் இசையுலகிற்கும் வழிகாட்டியாய் நின்று சேவையாற்றி தான் ஏற்றுக் கொண்ட கடமையை இறுதி மூச்சுள்ளவரை பூரணத்துவமாக்கி நிறைவேற்றுகின்ற பொறுப்பாளன் என்பதனை இசையுலகிற்கு நிரூபித்துக் காட்சிய கலைஞன்.

எம்மையெல்லாம் விட்டு நீங்கி இறைவனது பரம இசைக்குள் ஐக்கியமானதை இட்டும் அவர்தம் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் இந்நாள் தனில் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

"இசையால் இறைவனை வசமாக்கின் இவ்வுலகினின்று
நீ ஏற்றுக் கொள்வதற்கு ஏதுமில்லை"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலின் கருவியால் வானுயர்ந்து புகழ் பெற்ற அம்பலவாணர் ஜெயராமனின் இசை மீட்டல் ஓய்ந்தது

இசை உலகில் இற்றைவரை மிகப்பெரும் பங்குவகிக்கும் இசைக்கருவி வயலின். மேலைத்தேசம், கீழைத்தேசம் என வகைப்படுத்தப்பட்டுள்ள இசையில் இரண்டு வகைகளிலும் மிக ஆழமாக இடம் பிடித்துள்ளது. வயலின் வாத்தியம் என இப்பொழுது வழங்கப் பட்டுவரும் இந்த இசைக்கருவியை பிடில் (fiddle) என்று ஆரம்ப காலத்தில் அழைத்து வந்தனர்.

இந்த வாத்தியத்தை முதன்முதலில் உருவாக்கியவர் ஸ்ட்ராடிவேரியஸ் (Stradivarius) என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இப்பொழுது இது ஒரு இந்திய இசைக்கருவி என்று கூறும் அளவுக்கு கீழைத்தேச இசையில் வியாபித்துள்ளது. வயலின் இசை இன்றி எந்தவொரு இசைக்கோர்வையும் இல்லை என்ற விதமாக இன்றைய கீழைத்தேச இசை உலகம் உள்ளது. மேலைத்தேசத்தில் இந்த வாத்தியம் தனிப்பெரும் உயர்வுக் குரியது. வீணை வாத்தியம் யாழில் இருந்து மருவியது என்பது போன்று வயலின் வாத்தியம் ரெபெக் (Rebec) என்ற ஒரு பழம்பெரும் இசைக்கருவியில் இருந்து மறுவியதாக வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் 'லால்குடி' ஜெயராமன், 'குன்னக்குடி' வைத்தியநாதன் போன்றோர் வயலின் இசையில் வாழ்ந்தார்கள். வயலின் என்ற பெயரை உச்சரிக்கும் பொழுதே அவர்களின் பெயர்களும் மனதில் நிலைபெற்றுவிடுகின்றன. இதே போன்று ஈழதேசக்கலைஞர் களில்

கடந்த ஒரு நான்கு தசாப்த காலம் ஈழத்தில் புகழ்பூத்த மிருதங்க வித்துவான் அம்பலவாணர் அவர்களின் புதல்வர் அம்பலவாணர் ஜெயராமன் நுண்கலையில் ஈடுபட்டு வயலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியத்தியத்தைக் கைகளில் ஏந்தி அந்த இசையுடன் தன்னைச் சங்கமமாக்கிக்கொண்டார். யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி என்றாலே கலைகள் கொலுவிருக்கும் இடம் என்பார்கள். அந்தப் பகுதியில் கொலுவிருந்த கலைஞர்களில் மிக உன்னதமான, உயர்ந்த இசை ஞானம் மிக்கவராக விளங்கியவர் 'சுருதி வேந்தன்' அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள். வாழும் பொழுதே அவரை வீரகேசரி கலையரங்கம் பகுதியில் மாண்பேற்ற எண்ணியிருந்த பொழு திலும் அது நடைபெறவில்லை. அவர் இப்பொழுது எம்முடன் இல்லாத நிலையிலும் இவ்வார கலையரங்கம் அவரை மாண் பேற்றுகிறது. **29.08.1959**ல் பிறந்தவர் **08.04.2024**அன்று **65**வது வயதில் உயிரிழந்தார். உடலில் உபாதை ஏற்பட்டிருந்த பொழுதிலும், ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகள் எனக்கூறி அவற்றை நிறைவு செய்யச் சித்தம் கொண்டமை என்பது தொழில் பக்தியா? இல்லை கலைக்கு அளிக்கும் மதிப்பா? என்ற கேள்விகளை எழுப்புகின்றன. நிகழ்ச்சியையும் ஒலிப்பதிவையும் முடித்து விட்டு ஓய்வு எடுக்கலாம் என எண்ணிய அவரின் கலைப்பற்றுக்குக் காலன் கருணைகாட்டவில்லை.

'சுருதி வேந்தன்' 'இசைஞானச்சுடர்' என்ற பட்டங்கள் சூட்டி இசைக்கலாபிமானிகள் இந்தக்கலைஞரை மதிப்பளித்துப்பாராட்டி மகிழ்வித்திருக்கிறார்கள். இந்தப் பட்டங்களுக்கெல்லாம் ஜெயராமன் மிகவும் தகுதி படைத்தவர் என்பதை இசைவாணர் எம்.கண்ணன் அவர்களின் புதல்வர், இசையமைப்பாளர் முரளி அவர்களின் பதிவுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. "சுருதி வேந்தன்" என்ற பட்டம் ஜெயராமனுக்கு வயலின் இசையில் மகுடம் சூட்டியது போன்று அவருடன் நிலை பெற்றிருந்துள்ளது. இசையமைப்புப் பணிகள் நடைபெறும் பொழுது மெட்டுக்கள் மீட்டப்படும் வேளைகளில் மிக வேகமாக இசைக்குறிப்புக் களைப்பதிவு செய்யும் திறமை இவரிடத்தில் உள்ளது. ஜெயராமனின் இசைப்பயணத் தில் மிக நீண்ட காலம் சேர்ந்து பயணித்திருக்கிறார் முரளி என்பதால், அவர் பல்வேறு விடயங்களை ஜெயராமன் பற்றித் தெரிவித்திருந்தார். வயலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கச்சேரி, வயலின் இசை ஒலிப் பதிவு, பாடல் ஒலிப்பதிவு என்று வந்து விட்டால் ஜெயராமன் வேறு எந்த விடயங்களிலும் கவனம் செலுத்தமாட்டார். அவருடைய முழுமையான சிந்தனை வயலின் இசையுடனேயே பயணிக்கும். அந்தப்பணிகள் நிறைவு பெறும் வரை அவர் அந்த இசைக்குள்ளேயே நீச்சலடித்துக் கொண்டிருப்பார். கர்நாடக இசைக்கச்சேரிகளில் அவர் தனித்துவ மாய்த்திகழ்ந்தார். அதற்கு அப்பால், மெல்லிசைப் பாடல்கள் அவை ஆலயங்கள் பற்றிய பக்திப் பாடல்களாகவும் அமைந் துள்ளன. தாயக இசைப்பாடல் களுக்கு வயலின் இசை வழங்கு வதில் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருக்கிறார். இசைவாணர் எம்.கண்ணன் அவர்கள் இக்கலைஞனின் இசைத்திறமைக்கு, அவரின் வயலின் இசை மீட்டலுக்கு எந்த இடம் வழங்க வேண்டுமோ அந்த இடத்தை அவருக்களித்திருக்கிறார். மெல்லிசைக் குழுக்களுடன் சேர்ந்து வயலின் இசையை மீட்டிவந்தார். குறிப்பாக ‘ராஜன்ஸ்’ இசைக் குழுவில் நீண்ட காலம் அங்கம் வகித்திருக்கிறார். யாழ்.ரமணன் அவர்கள் ‘ராஜன்ஸ்’ இசைக்குழுவை இயக்கி வந்த காலத்தில் ரமணன் அவர்களும் ஜெயராமன் அவர்களின் வயலின் இசையை மெல்லிசைக்கச்சேரிகளில் மேன்மைப்படுத்தினார். “அருணா” இசைக்குழுவிலும் இவரது வயலின் இசைப்பங்களிப்பு இருந் துள்ளது.

ஈழத்தின் ஆடற்கலை விற்பன்னர் கலைஞர் வேலாநந்தன் அவர்களின் ஆடற்கலை அளிக்கைகளில் ஜெயராமன் அவர்களின் வயலின் இசை தனித்து நின்று ஒலித்து ஆடற்கலை அளிக்கைக்கு உயிர் கொடுத்தது. எத்தனையோ இசை, நடனத்துறை ஆசிரியர் களுடன் இணைந்து பணியாற்றி அவர்களின் திறமைகளுக்கும் அங்கீகாரம் கிடைக்கச்செய்த பெரும் கலைஞர் ஜெயராமன் அவர்கள்.

அமரர் திலகநாயகம் போல் அவர்களின் குரலிசை அரங்க அளிக்கையில், இசைவாணர் எம். கண்ணன் அவர்களின் இசைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களில், குழந்தை சண்முகலிங்கம், ஏ.சீ. தாசீசியஸ், க.பாலேந்திரா, சிதம்பரநாதன், ஜெயசங்கர், இராதாகிருஷ்ணன், ஸ்ரீகணேசன் எனப்பல நாடக நெறியாளர்களின் நாடகங்களுக்கு இசைவாணர் எம்.கண்ணன் அவர்களின் ஓர் இசைக்கரமாக இருந்து இசையால் உயிரூட்டிய அளப்பரிய பணிகள் நினைவு களாக நிலைபெற்றுள்ளன.

இசையமைப்பாளர் சத்தியன், கண்ணன் அவர்களின் இசைப்பயணத்திலும் ஜெயராமன் பங்களிப்பு உன்னதமானது. ஜெயராமன் பெயர் தாங்கிய வயலின் இசைக்கலைஞர் என்பதால், இவரிடத்தில் 'லால்குடி' ஜெயராமன் அவர்களின் பாதிப்பு இருக்குமோ என்று தேடிப்பார்த்து முரளி அவர்களுடன் உரை யாடிய வேளையில் முரளி கூறினார்: "ஜெயராமன் அண்ணா விடம் குன்னக்குடி அவர்களே வீற்றிருந்தார், அவர் குன்னக்குடி வைத்தியநாதன் பாணியையே பின்பற்றினார். திரையிசைப் பாடல்களை ஜெயராமன் அண்ணா வயலினில் மீட்டினால் குன்னக்குடி அவர்களே மேடைக்கு வந்தது போல இருக்கும். இரசிகர்களும் ஆரவாரித்து மகிழ்ச்சி பொங்க கரவொலி எழுப்பி மகிழ்வார்கள்." என்றார். மக்களை மகிழ்வித்து வாழ்ந்த வயலின் இசைக்கலைஞர் அம்பலவாணர் ஜெயராமன் மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பார்.

பாலேந்திரா - ஊடகவியலாளர்

*"வெற்றி என்பது பெரிதாய் ஒன்றுமில்லை..*
*நீங்கள் செய்யும் செயலில்*
*திருப்தியும் மகிழ்ச்சியும் நிறைந்து இருந்தால்*
*அதுவே உங்களின் வெற்றி.!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகளில் அமரர் அ.ஜெயராமன் அவர்களின் சிறப்பு



## நாகரிகம் என்ற பெயரில் இன்று சிலர் சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்

### இது வேதனைக்குரிய விடயம் என்கிறார் வயலின் இசைக்கலைஞர் ஏ. ஜெயராமன்





எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



## வயலின் கருவியால் வானுயர்ந்த புகழ் பெற்ற அம்பலவாணர் ஜெயராமனின் இசை மீட்டல் ஓய்ந்தது

## கலையரங்கம்







வீரகேசரி 28.04. 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வர சர்மாவின் சிஷ்யர்களது இசை ஆராதனை

இ. குமாரசாமிசர்மா



வயலின் வித்துவானாக விளங்கிய அமரர் கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வர சர்மாவின் 90ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிஷ்யர்கள் பலரினால் குரு சமர்ப்பணமாக யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் கடந்த சனிக்கிழமை 20ஆம் திகதி மாலை அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் கலந்துகொள்ள இசை ஆராதனை நிகழ்வை வெகு சிறப்பாக வழங்கினர்.

பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சம்மார் பலநூறு மாணவ மாணவிகளுக்கு வயலின் பாட்டு முதலான கலைகளைக் கற்பித்து அரங்கேற்றி பெரிய கலைஞர்களாக வெளிவரக் காரணமாக அமைந்த பெரும் வித்துவானாவார். அவர் மிகமிக அடக்கமும் புகழ்விரும்பாமையும் சாந்தமும் பொறுமையும் கொண்டவர். பல சிறுவர்களை இசைக்கலையில் முன்னேறப் பல வகைகளில் உதவிகள் புரிந்த அறிஞர். தமது வீட்டிலே தனது துணைவியார் திருமதி ருக்மணி தேவியின் ஆதரவுடன் பாரதி கலாமன்றம் அமைத்து வருடாவருடம் தியாகராஜ உற்சவம், சரஸ்வதி பூஜை நிகழ்வுகளில் மாணவ, மாணவிகள் பங்குகொள்ள வைத்து அவர்களது இசை நிகழ்வுகளுக்கு வயலின் வாசித்து அவர்களை முன்னேற ஆராதித்தவர்.

பிரம்மஸ்ரீ சர்மா இந்தியாவில் வயலின் இசை பயின்று எமது நாட்டில் பல பல கலைஞர்களுக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்து பெருமைப்படுத்தியவர். தமது சகோதரனின் மகனான சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். இராமநாதன் சிறந்த சங்கீத மேதையாக வருவதற்கு பேருதவி புரிந்தவர்.

குரு சமர்ப்பணமாக இந்த நிகழ்வில் அவரிடம் சங்கீதம் பயின்ற கலைஞர்களான காஞ்சனா செந்தூரன், ஹம்சத்வனி ஜெகதீஸ்வரன் சிவகுமாரன், கஜவதனன் பரமேஸ்வரன், கோதலன் அருளானந்தன், விக்னேஸ்வரன் பத்மநாதன், சியாம் கிருஷ்ணா, அம்பலவாணர் ஜெயராமன் முதலான கலைஞர்கள் இசை ஆராதனை மிகச் சிறப்பாகச் செய்தனர். மேலும் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சர்மாவிடம் பயின்ற பல சிஷ்யர்கள் பல்வேறு நாடுகளில் வசித்து வருபவர்கள் இந்த நிகழ்வு சிறப்பாக அமைய உதவிகள் புரிந்துள்ளனர்.

இந்துகலாசார அமைச்சின் பணிப்பாளர் அருளாந்தம் மா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இசை ஆராதனையில் முதன்மை விருந்தினராகச் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவனும், மதிப்புறு விருந்தினராகப் பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேலும் நிகழ்வை ஒழுங்கு செய்த காஞ்சனா செந்தூரனும் கலந்து சிறப்பித்தமை பாராட்டத்தக்கது.





பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் இடம்பெற்ற வைபவத்தில் வயலின் சிறப்பு கலைஞர் ஜெயராமன், சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவினால் பரிசு வழங்கி கௌரவிக்கப்படுவதையும் இராமநாதன் இசைக்கல்லூரி பண்ணிசை இணைப்பாளர் நா. வி. மு. நவரத்தினம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: வடமராட்சி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

6 வாரமலர் 28 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை

# இறுதி மூச்சுவரை வயலின் இசையுடன் இரண்டறக் கலந்த ஜெயராமன்

சசிகரன் பத்மநாதன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொட்டடி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வயலின் இசை மேதை அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள், ஏப்ரல் 08, 2024 திங்கட்கிழமை அன்று இறைபதமெய்தினார்.

ஜெயராமன் அவர்கள், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்), காமாட்சியம்மா தம்பதியரின் புத்திரனான அவர், யாழ்ப்பாணம், கொட்டடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றார். தனது ஒன்பதாவது வயதிலிருந்து பிரபல வயலின் வித்துவான் எஸ். சர்வேஸ்வர சர்மாவிடம் முறைப்படி வயலின் இசையைக் கற்றுக்கொண்டார். வட இலங்கை சங்கீத சபைப் பாடத்திட்ட ஆசிரியர் தரம் வரை வயலின் இசையைப் பயின்றுள்ளார். இவரது முதலாவது தனி வயலின் இசைக் கச்சேரி வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் பன்னிரண்டு வயதில் அரங்கேறியது.

வயலின் மேதை அமரர் உ. இராதாகிருஷ்ணனுடன் சேர்ந்து 1981-1983 வரை இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வயலின் வாசித்துள்ளதோடு ஆலயங்கள், கலைவிழாக்கள், இசை நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள் எனப் பல நிகழ்ச்சிகளில் வயலின் இசையை அணிசேர்த்துள்ளார். இவர், ஈழத்தில் பல நூற்றுக்கணக்கான இளங் கலைஞர்களையும் உருவாக்கியுள்ளார். அத்துடன், அவரது முழுநேரப் பணியாக யாழ். பொதுசன நூலக நாச்சிமார் கோவிலடிக் கிளையில், புத்தக செவ்வையாளராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றிருந்தார்.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் அமைச்சு 2003ஆம் ஆண்டு இரண்டாவது உலக இந்து மகாநாட்டு நிகழ்வின்போது இவரைப் பாராட்டிச் சிறப்புச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளது. அத்துடன் 'இசைஞானகரபி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இவரது தந்தையார் தனது பிள்ளைகள் அனைவரையும் தேர்ந்து இசை கற்பித்து முழுக் குடும்பத்தையும் இசை வாரிசுகளாக்கினார். அந்தவகையில், மூத்த மகனான இராதநாதனையும் இளைய மகனான சித்திவாசனையும் மிருதங்கத்திலும், சந்தானலட்சுமி, சரஸ்வதி, இராமச்சந்திரன் ஆகியோரை வாய்ப்பாட்டிலும் ஜெயராமனை வயலினிலும் இசை விற்பனராக்கினார்.



இவர் ஐந்து தில்லானாக்களை புதிய இராகங்களில் இயற்றி உள்ளார். தனக்குப் பிடித்த இராகங்களாக கல்யாணி, காம்போதி, சாருகேசி, கரகரப்பிரியா, சங்கராபரணம், பல இராகங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஜெயராமன் அவர்கள் தான் விரும்பியபடியே, இறுதிவரை இசையோடு பயணித்து இசையுடன் சங்கமித்தார்.

நாடகத் துறையில் 'இசைவாணர்' கண்ணன் அவர்களின் படைப்பாக்கங்கள், மற்றும் 'லப்தமி' கலையகத்தில் இசையமைத்து ஒலிப்பதிவு செய்யப்பட்ட விடுதலைப் பாடல்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட வெளியீடுகளிலும், தாசீசியஸ், பாலேந்திரா, குழந்தை சண்முகலிங்கம், சிதம்பரநாதன், ஜெயசங்கர், இராதாகிருஷ்ணன், ஸ்ரீகணேசன் போன்ற நெறியாளர்களின் நாடகப் படைப்புகளில் மேளகுரு, மற்றும் சத்தியன் அவர்களோடும் இணைந்த இவரது பணி பெறுமதி வாய்ந்தது, என ஈழத்து பிரபல இசையமைப்பாளர் முரளி அவர்கள் நினைவுகூருகிறார்.

ராஜன்ஸ், அருணா இசைக்குழுக்களில் இணைந்து இசை வழங்கியதோடு, 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்' ஆகிய நாடகங்களில் நாடக நடிகர் குழாமுடன் இரண்டறக் கலந்து செயலாற்றியதை மறக்க முடியாது என நெறியாளர் க. பாலேந்திரா நினைவுகூருகின்றார்.

இவருக்கு, 'கலைஞானச்சுடர்', 'கலைச்சுடர்', 'சுருதிவேந்தன்', 'வயலின் வேந்தன்', 'இசைஞானகரபி' போன்ற பட்டங்கள் சிறப்புச் சேர்க்கின்றன.

இவரது இசையாழ்வு ஈழத்தின் இனிவரும் இசைப்பாரம்பரியத்தின் தடங்களையும் செம்மையுடன் வழிநடத்தும் எனவும் நாம் நம்புகிறோம்!

இவரது இறுதி யாத்திரை நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன், 'செஞ்சொற்செல்வர்' கலாநிதி ஆறுதிருமுருகன், யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. வசந்தன், 'சிவநெறி கலாநிதி' இராஜையா ஸ்ரீதரன், வண்ணை நாச்சிமார் கோயில் தலைவர் திரு. சிதம்பரநாதன், 'இளங்கலைஞர் மன்ற'ச் செயலாளர், இசையமைப்பாளர் செல்வச்சந்திரன், 'காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்' சோதிநாதன், திருமறைக் கலாமன்ற இயக்குனர் திரு. ஜோன்சன் ராஜ்குமார், வட இலங்கை சங்கீத சபை முன்னாள் தலைவர் திரு. சிவராஜன், யாழ். பல்கலைக்கழக எழுத்தாளர், இசை விரிவுரையாளர் பொன் வாமதேவன் உட்பட இன்னும் பல துறைசார் பிரமுகர்கள் இரங்கல் உரையில், அமரர் ஜெயராமனுடனான தங்களின் அனுபவப் பகிர்வை நினைவுகூர்ந்து அஞ்சலியைச் செலுத்தினர். 'இளங்கலைஞர் மன்றம்' அன்னாரது இறுதி நிகழ்வை செவ்வனே நெறிப்படுத்தியிருந்தது.

# ஈழத்து வயலின் கலைஞர் அ.ஜெயராமன்

## 1959–2024 சில நினைவுகள்



நாடக நெறியாளர்
க.பாலேந்திரா (லண்டன்)



சுருதி வேந்தன் - வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் இன்று எம்மோடு இல்லையென்பது மிகவும் கவலையளிக்கிறது. என்னை விட பல வருடங்கள் இளையவர் ஜெயராமன். யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வயலின் இசைக் கலைஞர். அவரை நான் முதல் முறையாகச் சந்தித்தபோது இசையாளர் கண்ணன் அவர்களுடைய வீட்டுக்கு அண்மையில் இருந்தார். கண்ணனே இவரை எனக்கு 70களின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தி வைத்தார். அப்போது அவருக்கு ஒரு 20 வயது இருக்கும்.

ஜெயராமன் ஒரு சிறந்த கலைஞர் மட்டுமல்ல, ஓர் அற்புதமான மனிதருங்கூட. நல்லதொரு team worker. அவர் எந்தக் குழுவில் பணியாற்றினாலும் அந்தக் குழுவின் ஓர் அங்கத்தவராக முழு ஈடுபாட்டுடன் பணியாற்றும் திறன் உடையவர். கர்நாடக இசைத் துறையில் பயின்றவர் என்றபோதிலும் மேற்கத்தேய பாணி இசையை இசைக்கக்கூடிய வல்லமை உடையவர். அதனால்தான் சிறந்த முறையில் எமது நாடகங்களுக்கு உயிரூட்டிய ஒரு சிறந்த கலைஞராக விளங்கினார்.

எழுபதுகளின் இறுதிப் பகுதியில் இலங்கையில் நாம் நாடகத் துறையில் இயங்கிய காலங்களில் வயதில் மிகவும் இளையவராக எமது நாடகக் குடும்பத்தில் ஒரு முக்கிய அங்கத்தவராக இணைந்தவர் இவர். அந்தக் காலத்தில் எமது நாடெங்குமான நாடகப் பயணங்களில் எல்லாம் சிறப்பாகப் பங்கேற்றுச் சிறப்பித்தவர்.

எமது 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்' ஆகிய நாடகங்களில் இவரது பங்கு சிறப்பானது. எமது கானசாகரம் - ஈழத்து மெல்லிசை நிகழ்ச்சியிலும் பங்குபற்றியவர். குறிப்பாக, 1980இல் யாழ். நகரில் நாம் நடத்திய நாடகச் சுற்றுலாவின்போதும், திருகோணமலை, மட்டக்களப்பு, பேராதனை போன்ற இடங்களில் நடத்திய நாடக நிகழ்வுகளின்போதும் எம்மோடு பயணித்து நாடக குடும்பத்தில் ஒருவராக செயற்பட்ட கலைஞர் ஜெயராமன்.

மேற்கத்தேய சாயலுடன் கண்ணன் இசையமைத்த யுகதர்மம் நாடகத்தில் வரும் பாலைவனக் காட்சிகளில் வருகின்ற ஹம் மற்றும் கோரஸ் இசையில் இவரது பங்கு சிறப்பானது. சில இடங்களில் தனித்து வயலின் மட்டுமே வரும்படி கண்ணன் இசையமைத்திருந்தார். harmonise செய்துவரும் இசைக்குத் திறமையாக வலுவூட்டிய கலைஞர் ஜெயராமன்.

குறிப்பாக, யுகதர்மம் நாடக மேடையேற்றங்களின்போது நீதிபதியின் வருகை நகைச்சுவையாக ஒரு கூத்துப் பாணியில் அமைந்ததாக இருக்கும். அதற்கு அவர் வயலினில் PLUG செய்து வாசிக்கும் இசை மிகவும் பொருத்தமாக இருந்தது. இதைவிடவும் கூலி பாடுவதாக அமைந்த 'ஆற்றுப் படுக்கையிலே' என்ற ஸ்லோ டெம்போவில் அமைத்த பாடலுக்கு ஜெயராமன் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது.

மொட்டைப் பங்களைக்குழ இளைஞர்களான எமது யுகதர்மம் நாடக, நடிகர் குழாமுடன் இரண்டறக் கலந்து செயலாற்றியதை மறக்க முடியாது. நாடகப் பயணங்களின் போது நாம் பாடல்கள் இசைத்துக்கொண்டு பயணிப்பதும் அதில் அவரது பங்கும் ஈடுபாடும் எனது மனதில் நிழலாடுகிறது. குறிப்பாக ரயில் பயணங்களின்போது எமது நாடகக் குழுவினர் பாடல்களை இசைக்கும்போது வயலினை எடுத்து மிக உற்சாகமாக எமது குழுவில் இணைந்து பாடல்களுக்கு வலுவூட்ட, அங்கிருக்கும் பயணிகள் எல்லோரும் - தமிழர்கள், சிங்களவர்கள் என்று அனைவரும் சுற்றிநின்று ரசிப்பதுண்டு. இந்த மாதிரியான ஒரு காட்சியை கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக போர்க் காலங்களில் இலங்கையில் பார்த்திருக்க முடியாது. இப்போது நினைத்துப் பார்த்தால் அது ஒரு கனாக் காலம்தான்.

வயலின் மேதை லால்குடி ஜெயராமனின் பெயரை இவரும் கொண்டிருந்தவர். வயதில் இளையவராக இருந்ததினால் இவரை நகைச்சுவையாக - அந்தக் காலங்களில் விளையாட்டாக பால்குடி ஜெயராமன் என்று இசையமைப்பாளர் கண்ணனும் எமது நாடகக் குழு இளைஞர்களும் அழைப்பதுண்டு. அதை பெருந்தன்மையுடன் நகைச்சுவையாக எடுத்துக்கொண்டு செயலாற்றுவார்.

அந்தக் காலத்தில் வயலின் வித்துவான் அமரர் ராதாகிருஷ்ணனுடன் கச்சேரி செய்வதைப் பார்த்து ரசித்திருக்கிறேன். நாம் புலம்பெயர்ந்த பின்னர் இசைத் துறையில் அவரது வளர்ச்சி அபரிதமானது. ஈழத்தில் மிகவும் புகழ்பெற்ற கலைஞராக மிளிர்ந்ததைப் பார்த்துப் பெருமையடைந்திருக்கிறேன். ஒருமுறை பொங்கல் காலத்தில் அவரது நேர்காணல் லண்டனிலுள்ள ஆதவன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்தபோது அதைப் பார்த்து மகிழ்ந்தேன். தற்போது நம்மோடு லண்டனில் இசைத் துறையில் பயணிக்கும் வயலின் வித்துவான் ஜெலதரன் சிதம்பரநாதன் (ஈழத்து புகழ்பெற்ற நாதஸ்வர கலைஞரின் புதல்வன்) மற்றும் வாய்ப்பாட்டுக் கலைஞர் பவனுஜா சுஜாகரன் ஆகியோர் இலங்கையில் இருந்தபோது ஜெயராமனுடன் பணியாற்றியவர்கள் என்று அறிந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இவர், யாழ்ப்பாணம், கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். தனது ஒன்பதாவது வயதிலிருந்து பிரபல வயலின் வித்துவான் எஸ்.ஈஸ்வரலிங்க சர்மாவிடம் முறைப்படி வயலின் இசையைக் கற்றுக்கொண்டார். வட இலங்கை சங்கீத சபைப் பாடத்திட்டத்துக்கமைய ஆசிரியர் தரம் வரை வயலின் இசையைப் பயின்றுள்ளார். இவரது முதலாவது தனி வயலின் இசைக் கச்சேரி வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் பன்னிரண்டு வயதில் அரங்கேறியது. வயலின் வித்துவான் அமரர் உ. இராதாகிருஷ்ணனுடன் சேர்ந்து 1981 - 1983 வரை இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வயலின் வாசித்துள்ளதோடு ஆலயங்கள், கலைவிழாக்கள், இசை நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள் எனப் பல நிகழ்ச்சிகளில் வயலின் இசையைப் பக்கவாத்தியமாக இசைத்து வந்தவர்.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் அமைச்சு 2003ஆம் ஆண்டு இரண்டாவது உலக மாநாட்டு நிகழ்வின்போது இவரைப் பாராட்டிச் சிறப்புச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவருக்கு 'இசைஞானசுரபி' எனும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் லண்டன் Unity அமைப்பு எமது கானசாகரம் ஈழத்து இசை நிகழ்ச்சியின் 45ஆவது வருட பூர்த்தியைப் பாராட்டி Zoomஇல் ஒரு நிகழ்ச்சி நடத்தியபோது கானசாகரத்தில் ஆரம்பத்தில் பங்குபற்றிய அனைவரையும் அழைக்க விரும்பி ஜெயராமனைத் தொடர்புகொண்டேன். அப்போது அவர் இருதய நோய் காரணமாக நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை. அதுதான் அவருடனான இறுதி உரையாடல் என்று நான் நினைத்திருக்கவில்லை. அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

**அவருடைய இசையும் அவர் நினைவுகளும் என்றென்றும் வாழும்!**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7



அண்மையில் மறைந்த, பிரபல வயலின் மேதை 'சுருதிவேந்தன்' அம்பலவாணர் ஜெயராமன் அவர்களது மறைவையொட்டி, அவரது கடந்த 50 ஆண்டுகால இசைப்பயணத்தில் அவருடன் பயணித்த கலைத்துறைசார் நண்பர்களதும், அன்னாரது பதிவுகளிலிருந்து ஒரு தொகுப்பாக இக்கட்டுரை வெளிவருகிறது



# "ஐந்து தசாப்த 'சுருதி ஓசை' இசையுடன் சங்கமித்தது!"

யாழ். வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், ... பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன், அவர்கள், ஏப்ரல் 08, 2024 திங்கட்கிழமை அன்று இறைவடி சேர்ந்தார்.

[illegible]






இவருக்கு, 'கலைஞானச்சுடர்', 'கலைச்சுடர்', 'சுருதிவேந்தன்', 'வயலின் வேந்தன்', 'இசைஞானசுரபி' போன்ற பட்டங்கள் சிறப்புச் சேர்க்கின்றன. இவரது இசைவாழ்வு, ஈழத்தின் இன்னிசைப் பாரம்பரியத்தின் தடங்களையும் செம்மையுடன் வழிநடத்தும்.

[illegible]

(தொடர்ச்சி 27ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# நன்றி

கடந்த 08.04.2024 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின்**

இறப்புச் செய்தி கேட்டு
உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமும்,
சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகைகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள்
(கலாமன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்) மூலம் தமது
அஞ்சலியைச் செலுத்தியவர்களுக்கும், மாலைகள் அணிவித்து
மலர்வளையங்கள் வைத்து வணக்கம் செலுத்தியவர்களுக்கும்,
மரணச்சடங்கின்போது அஞ்சலி உரை நிகழ்த்திய பெரியோர்கள் மற்றும்
அன்னாரின் பூதவுடலுக்கு திருவாசகம் பாடி அஞ்சலி செலுத்தி யவர்களுக்கும்,
சகல விதத்திலும் உதவிகள் பல புரிந்த கலைஞர்கள்,
அந்தணப் பெருமக்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள்,
கிராமமக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இல.07, கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

\- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

-கீதாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org